www.tamilarangam.net

தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# எரிமலை


கலை கலாச்சார அரசியல் சமூக ஏடு கார்த்திகை 1991



## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களத்தில் புலிகள்

வெற்றியின் பாதையில்



www.tamilarangam.net



எரிமலை

கலை கலாச்சார
அரசியல் சமூக ஏடு

பத்தாம் ஆண்டு

நவம்பர் 1991

விடுதலைப் பாதையில்

# நொறுங்கும் தடைகள்.

ஸ்ரீலங்கா அரசு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடலாம் என்று எண்ணிச் செயல்படுகின்றது. இராணுவ ரீதியான தீர்வே அதன் தீர்க்கமான முடிவாக உள்ளது. விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதன் மூலம், ஒற்றையாட்சி முறையின் கீழ் சிங்கள மேலாதிக்கத்தை ஏற்படுத்துவது என்ற இனவாத, பாஸிசக் கொள்கையைத் தவிர ஸ்ரீலங்கா அரசிடம் உருப்படியான திட்டம் எதுவும் இல்லை. இக்கொள்கை புதிதான தல்ல; 40 வருடகால நடைமுறையே.

இத்தகைய நாசகார, நடைமுறைச் சாத்தியமற்ற திட்டத்தை நிறைவேற்றப் பலவழிகளில் அரசாங்கம் முயலுகின்றது. தனது இராணுவ பலத்தைப் பெருக்குவது; பொது மக்களிடையே பெரும் அழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதக் கருவிகளை வாங்கிக் குவிப் பது; பொருளாதாரத் தடையை மேலும் இறுக்குவதன் மூலமும், பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலமும் தமிழ் மக்களை நிலைகுலைய வைத்து போராட்டத்தில் இருந்து திசை திருப்புவது; பேச்சுவார்த்தைக்கான முன்நிபந்தனைகளையும், தீர்வுக்கான அடிப்படையையும், தனது மேலாதிக்கத்திற்கு சாதக மாக வகுத்துக் கொண்டு, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தான் தயார் எனப் பிரச்சாரப் படுத்துவதன் மூலம், சர்வதேச சமூ கத்தை ஏமாற்றுவது; நிதி உதவிகளை, பொருளாதார அபிவிருத் திக்கென மேற்குலகிடமிருந்து பெற்றுப் போருக்குப் பயன்படுத்து வது; செல்லாக் காசான தமிழ்க் குழுக்களை இராணுவ நடவடிக் கையில் இணைத்தும், அவற்றிற்கு அரசியல் அந்தஸ்தை செயற் கையாக அளித்தும், தமிழீழ தேசிய விடுதலைக்கு எதிரான கருத்து தமிழ் மக்களிடம் இருப்பதாகக் காட்ட முனைவது; இறுதியாக, இந்திய மத்திய, மாநில அரசுகளின் விடுதலைப் புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளை தனக்கும் சாதகமாகப் பயன்படுத்துவது என்ற ரீதியில் ஸ்ரீலங்காவின் போர்த் தந்திரோ பாயம் அமைந்துள்ளது.

தமிழீழ மக்களை அணிதிரட்டுவதன் மூலமும், அவர்களது ஆக்க சக்திகளை விடுதலையுடன் இணைப்பதன் மூலமும், ஸ்ரீலங்கா அரசின் இன அழிப்புத் திட்டத்தை விடுதலைப் புலிகள் முறிய டித்து வருகின்றனர். மக்களின் ஆதரவும், விடுதலை வீரர்களின்

ஆக்கங்கள்,
அபிப்பிராயங்கள்,
மற்றும் தொடர்புகட்கு:

எரிமலை
c/o C.C.T - France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



[illegible]லும் அலையாகத் [illegible] தடைகளை உடைத்து வருகின்றன. போர்த் திட்ட அடிப்படையிலும், [illegible] விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ள முன்னெடுப்புக்கள், ஸ்ரீலங்கா அரசின் [illegible] தோல்வி[illegible]ந்து வருகின்றன. எதிர்ப்புகளை துணிவுடன் எதிர் கொண்டு வெற்றி [illegible]இன் நடைமுறையாக உள்ளது.

ஸ்ரீலங்கா அரசாங்கம் வரலாற்றுப் போக்குக்கும், விடுதலைச் சக்திக்கும் எதிராக வீணான பிரயத்தனத்தை [illegible] உலகில் நடைபெறும் முற்போக்கான, தேசிய விடுதலைக்கான மாற்றங்களைக் காணப் பிடி[illegible]து வருகின்றது. பிற்போக்குத் தனமான, இப்பிடிவாதப் போக்கு எமது பிராந்தியத்திலும் ஒரு தடைக்[illegible]ாக உள்ளது. எமது புரட்சிகரப் போராட்டமே, இம்மூடுபனியை விலக்கும் ஒளியாகக் காட்சி தருகின்றது.

தமிழ் நாட்டிலே ஏற்பட்டு வரும் மக்கள் எழுச்சியும், தேசிய விடுதலை உணர்வுகளும், அரச நடவடிக்கைகள் தற்காலிகமானவை எனவும், தமிழ்த் தேசியப் பிரவாகத்தில் அவை விரைவில் அமுங்கி விடும் எனவும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகக் காட்டி நிற்கின்றன. ■

## [illegible] முகிழ்ப்பு

ஆயிரம் ஆயிரமாய்
அணி அணியாய்
எமது தேசத்தின்
விடியலுக்காய்
தீயில் குளித்திட்ட
ஓ....
மாமனிதர்களே !
உங்கள்
பாதம் பதிந்த பாதைகளில்
இன்று
முழுத்தேசமும் அல்லவா
அணிவகுத்து நிற்கிறது.

ஆம்
அதோ ! அதோ !
உங்கள்
கனவுகள் விதைக்கப்பட்ட
கல்லறைகளின் பூமியில்
நாளை முகிழ்வதற்காய்
சுதந்திரப் பூக்களின்
அரும்புகள்.

www.tamilarangam.net



## மண்ணின் மைந்தனாக

# மணலாறில் நவம்

இராணுவப்பரிசோதனை ஒன்றின் போது கையை இழந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றான் ஒரு போராளி. வருவோர் போவோர் எல்லாம் அவனுக்கு ஆறுதலும், அனுதாபமும் தெரிவிக்கின்றனர். அது அவனுக்கு சினத்தை மூட்டுகின்றது. இறுதியாக அவனது தாய் வருகின்றாள் "நீ போராடியது போதும். இனி உனக்கு ஒரு கையில்லை; வீட்டிலேயே இரு." பாசத்தின் மேலீட்டால் இப்படியொரு கோரிக்கை விடுகின்றாள் தாய். அது அவனது மனக்கொதிப்பை அதிகரிக்கின்றது. தனக்கு அனுதாபம் கூறவந்தவர்களுக்கு சொல்ல வேண்டியதைச் சொல்ல இதுதான் தருணம் எனத் தீர்மானிக்கின்றான்.

"எனக்கு இன்னொரு கை இருக்கு" உறுதியுடன் தெளிவாக ஒலிக்கின்றது அவன் வார்த்தைகள். அவனுக்கு ஆறுதல் கூற முனைந்தவர்களும் தமது நிலையை எண்ணி நாணுகின்றனர். கால் இழந்த போராளிகளுக்குக் கிட்டு எப்படி நம்பிக்கை நட்சத்திரமாக, வழிகாட்டியாக திகழ்கின்றாரோ அதே போலத்தான் போராட்டத்தில் தமது கரங்களை இழந்த போராளிகளுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றான் அவன். அவன்தான் டடி.

டடி / நவம் வன்னிக் காடுகளின் மூலை முடுக்குகள் எல்லாம் இவனுக்கு அத்துப்படி. இக்காடுகள் பற்றிய படம் இவன் நெஞ்சில் நிறைந்திருக்கும். இவன் பிறந்தது மலைப் பிரதேசத்தில்; விடுதலைக்காக உழைத்தது... போராடியது வன்னிக் களங்களில்; வன்னியை நேசித்த... வன்னிக்களத்திலே காயமுற்ற இவனது உயிர் பிரிந்தது தமிழகத்தில்.

"பசிலனையும், லோறன்சையும் சேர்த்தால் அதுதான் நவம்" இவனுடன் நெருங்கிப் பழகிய ஒரு போராளி கூறிய வார்த்தைகள் இவை. ஒவ்வொரு போராளிக்கும் தனித்துவமான சில ஆற்றல்கள் இருக்கும். துணிச்சலுக்குப் பெயர் போனவன் பசிலன். சிறந்த மதிநுட்பத்திற்குப் பெயர் போனவன் லோறன்ஸ். இருவரது தன்மைகளையும் ஒருவரிடத்தில் கண்டதால் தான் நவத்தைப்பற்றி அப்போராளி இவ்வாறு குறிப்பிட்டான்.



அதிதியாக வந்தோரால் அகதியாக ஆக்கப்பட்டதுதான் மணலாற்று மக்களின் வரலாறு. இன்றோ தமது சொந்த நிலத்தை தாமே பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வுடன் நிற்கிறார்கள் மணலாறு மக்கள். வரலாற்றில் இந்நிலையை ஏற்படுத்தியதில் கணிசமான பங்காளிகள் நவமும் அவனது தந்தையுமே. எப்போதும் துப்பாக்கியுடன் காணப்படும், "ஒமர்முக்தார்" என்று போராளிகளால் அழைக்கப்படும் இவனது தந்தையும் இவனும் இந்த மண்ணை விட்டு நாம் எங்கும் போவதற்கில்லை என்ற செய்தியை ஸ்ரீ லங்கா அரசிற்கு அடிக்கடி உணர்த்தினார்கள்.

அரசன் ஒருவன் தான் கைப்பற்றும் பிரதேசங்களைத் தன் ஆட்சியின் கீழ் வைத்திருப்பதற்கு அவனுக்கு உதவுவது அங்கு அவன் விட்டுச் செல்லும் அவனது இராணுவமுகாம்கள் அல்ல. இதைவிட அவன் தனது பிரதேசத்து மக்களை அங்கு குடியேற்றுவதன் மூலம் சிறப்பாகச் செய்யலாம். காரணம் அங்கு குடியேறும் மக்கள் அங்கு நிரந்தரமாக வசிக்கப்போகிறவர்களாதலால் அவர்கள் எவ்வித இடர்களையும் எதிர்கொள்ளவும், அவ்விடங்களைத் தமதாக்கிப் போராடுவதற்கும் தயாராக இருப்பார். இது இளவரசன் என்னும் நூலில் காணப்படும் மாக்கிய வல்லியின் கூற்று. இதை அப்படியே நடைமுறைப்படுத்தியதால் தான் இன்று அம்பாறை என்றொரு தொகுதியே முழுச்சிங்களத் தொகுதி என்றாகிவிட்டது. இதையே படிப்படியாக திருமலை, மணலாறு என விஸ்தரித்து வருகின்றது சிறிலங்கா அரசு. ஆனால் இது தமிழீழ மண் என்று எல்லை போட்டுக் காட்டியது நவத்தின் துப்பாக்கி. குடியேற்றக்காரர்கள் என்பது ஆக்கிரமிப்பு இராணுவத்தின் ஒரு வடிவமே என்பதை இவன் உணர்ந்து அதுக்கேற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டபடியால் இன்னொரு ஒதியமலை வரலாறு மீண்டும் நிகழாது தடுக்கப்பட்டது.

www.tamilarangam.net



நெருக்கடி மிகுந்த காலகட்டங்களான, எங்கும் இந்திய இராணுவ மணம் வீசிய அந்த நாட்களில் இயக்கத்தையும், இயக்கத் தலைமையையும் பாதுகாக்க இவன் மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையையும் பற்றி இவனுடன் பழகிய ஒவ்வொரு போராளியும் கண்கள் பனிக்க கதைகதையாகக் கூறுகின்றனர்.

**கால் இழந்த போராளிகளுக்கு கிட்டு எப்படி நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்கின்றாரோ அதே போலத்தான் போராட்டத்தில் தமது கைகளை இழந்த போராளிகளுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றான் அவன்.**

சூழலுக்கேற்ற மாதிரியும், மக்களுக்கேற்ற மாதிரியும் அமைந்த இவனது ஒவ்வொரு செயலும் போராட்டம் பற்றிய தெளிவை புதிதாகப் போராட்டத்தில் இணைந்துகொள்ளும் இளைஞர்களுக்கு, சிறுவர்களுக்கு ஊட்டியது. நெருக்கடியான காலகட்டத்தில் பதட்டப்படாமல் செயற்படும் துணிவை சகபோராளிகளுக்கு ஊட்டினான். காட்டில் நவம் நிற்கும் பகுதி ஒரு பாதுகாப்பு வலயம் என்றே கூறலாம். அந்தளவுக்குச் சிறந்த முறையில் ஒரு ஒழுங்கமைப்பை உருவாக்கியவன் அவன்.

ஒற்றைக்கையால் இவன் செய்யும் வேலைகளைப் பார்த்த ஒவ்வொருவருக்கும், இவனால் இது முடியுமானால் என்னால் ஏன் முடியாது என்ற தன்னம்பிக்கையை ஊட்டியது. அவ்வாறு உருவான போராளிகள் தான், இன்று வன்னி மண்ணைக் காத்து நிற்கின்றனர்.

கணக்கற்ற களங்களைக்கண்ட இவனை நாம் இழந்தது உண்மைதான். ஆனால் இவனால் ஊட்டப்பட்ட ஒழுங்கமைப்பு, போராட்ட உணர்வு எதையும் மணலாறு மண் மறந்துவிடவில்லை. அவ்வப்போது மணலாறு பிரதேசத்தில் எதிரியிடமிருந்து இவனால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன் திரியும் போராளிகளும், ஊர்காவல் படையும் சொல்லும் செய்தி இதுதான். ■

## சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறுகின்றார்...

### "விடுதலைப் புலிகளை அழிக்கமுடியாது."

எதிர்க்கட்சித் தலைவியும், முன்னாள் பிரதம மந்திரியுமான சிறிமாவோ பண்டாரநாயக்கா, இரு வாரத்திற்கு ஒருமுறை வெளிவரும் தமிழ்ச் சஞ்சிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில், கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்களைப் பற்றிக் கேட்டபோது;
தங்களுடைய தாயகத்திற்கு போகமுடியாதவர்கள், அதைப்பற்றி அதிகம் கதைக்கின்றனர்.
தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், E. P. R. L. F, P. L. O. T, T. E. L. O, E. N. D. L. F, ஆகியவற்றைக் சுட்டிக்காட்டி, இவற்றில் எவை யாழ்ப்பாணத்திற்கு செல்லமுடியும்? இந்தக் குழுக்கள் சிங்களப் பிரதேசத்தில்தான் செயற்படமுடியுமே தவிர, வடக்கு கிழக்கில் அல்ல என்று கூறினார்.

இரு ஆட்சிக் காலங்களில் சுமார் 12 வருடங்கள் பிரதமமந்திரியாக இருந்த அவர் மேலும் கூறியதாவது;

"தமிழர்கள் தனிநாடு கேட்கின்றார்கள் ஏனென்றால், தமக்கு இந்த நாட்டில் பாதுகாப்பில்லை என்பதை அவர்கள் உணர்ந்துள்ளார்கள். தமிழர்களின் பிரச்சனையை இராணுவ ரீதியாகத் தீர்க்கமுடியாது. அரசியல் தீர்வே இதற்கு சாலச் சிறந்தது. விடுதலைப் புலிகளை முற்றாகவே அழித்துவிட முடியாது."

"J. V. P யினரை 1971 ம் ஆண்டு முற்றாக அழித்துவிட்டதாகத்தான் நினைத்தேன். 18 ஆண்டுகளின் பின் முழுப்பலத்துடன் அவர்கள் வளர்ந்துவிட்டார்கள். அது முற்றாக அழிக்கப்படவில்லை. விடுதலைப் புலிகள் விடயத்திலும் இவ்வாறே 100 போராளிகள் இறக்கும் போது 200 புதிய போராளிகள் இணைக்கின்றனர்."

"விடுதலைப் புலிகளை நீங்கள் ஒருபோதும் முற்றாக அழித்துவிட முடியாது. விடுதலைப் புலிகளினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் திட்டத்தை நாம் வரைந்தால்த்தான், தமிழர் பிரச்சனைக்கு ஓர் நிரந்தரத் தீர்வை நாங்கள் காணமுடியும்."

www.tamilarangam.net



# சமாதானத் தீர்வு சாத்தியமா ?

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சனைக்கு சமாதான வழிமூலம், பேச்சுவார்த்தை மூலம் தீர்வினைக் காண விடுதலைப் புலிகள் எப்பொழுதும் தயாராக உள்ளனர். நாற்பது ஆண்டுகாலமாக கொடுமைகளுக்கும், இன அழிப்பிற்கும், அரச பயங்கரவாதத்திற்கும், ஒடுக்குமுறைக்கும் உள்ளாகி பாதிப்புக்குள்ளான மக்கள் என்ற வகையில், அமைதியையும், சுபீட்சத்தையும் அவாவி நிற்பவர்கள் அவர்களாகவே இருக்கும். ஆயினும் அவ்வமைதி சுதந்திரத்தின் அடிப்படையிலும், நீதியின் அடிப்படையிலும் நிரந்தரமாகவும் இருத்தல் வேண்டும். அதற்கு, தமிழ் மக்களின் ஆதார உரிமையான, பிறப்புரிமையான, விட்டுக் கொடுக்க முடியாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலேயே தீர்வு காணப்பட வேண்டும்; அதுவே நிரந்தர சமாதானத்திற்கும் வழிவகுக்கும். தமிழ் மக்களும், சிங்கள மக்களும் ஒற்றுமையாகவும், கூட்டுறவுடனும் வாழ வழிவகுக்கும். இசைவான இரு தேசங்கள் என்பதே சரியான முடிவாக அமையும்.

உலகத்தில் பலவித முற்போக்கான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற போதிலும் சிறீலங்கா அரசின் இனவாதப் போக்கில் எவ்வித மாறுதலும் தெரியவில்லை. புதிய பல நாடுகள் உருவாகியும், சுயநிர்ணய உரிமைப் போராட்டக் கருத்துக்கள் உறுதி பெற்றும் வரும் இவ்வேளையில், சிறீலங்காவில் தோன்றிய அரசியல் நெருக்கடியை திசை திருப்பவும், அதில் ஆதாயம் பெறவும் இனவாத உத்திகளே கையாளப்படுகின்றன. ஜனாதிபதி பிரேமதாஸா தானே தலைசிறந்த இனவாதி என்றும், துட்டகைமுனுவின் வாரிசு என்றும், சிங்கள மக்களின் பாதுகாவலன் என்றும் நிரூபிக்க, இராணுவ நடவடிக்கையை முடுக்கிவிட்டு இன அழிப்புக்களை மேற்கொண்டு வருகின்றார். ஐக்கிய தேசியக் கட்சி கிளர்ச்சிக்காரர்களும், எதிர்க்கட்சியினரும் இனவாதப் பிரச்சாரத்தில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். தமிழர்களின் ஆட்சி ஏற்படப் போவதாக இனவாதத்தைக் கக்குகின்றனர். ஒரு சிறு உரிமையைக் கூடக் கொடுக்கக்கூடாது என பச்சையாகவே கூறித்திரிகின்றனர். பௌத்த குருமார் மூலம் வீடு வீடாக, கிராமம் கிராமமாகப் பிரச்சாரம் செய்வதோடு, பொதுக் கூட்டங்களையும் நடத்தி வருகின்றனர். அதிகாரப் போட்டிக்கான இரு பிரிவினரின் மோதல்களில், தமிழர்கள் தாக்கப்படுவது புதிய விடயமல்ல.

இவ்வாறு, அரசியல், இராணுவ ரீதியாக இனவாதப் பூதம் கட்டவிழ்த்துவிடப்பட்ட நிலையிலேயே பேச்சுவார்த்தைச் சுலோகமும் முன்வைக்கப்படுகின்றது. சிறீலங்கா அரசாங்கத்தின், பேச்சுவார்த்தை என்ற சொல்லுக்கு, சரணடைதல் என்ற அர்த்தத்தையும் கற்பிக்கலாம். பேச்சுவார்த்தை எந்த அடிப்படையில் நடத்தப்பட வேண்டும் என சிறீலங்கா அரசாங்கம் வகுக்கும் வரையறை இக் கருத்தையே சுட்டிநிற்கின்றது. சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையை (NATIONAL) சாதாரண இனப்பிரச்சினையாகவே (ETHN-IC) கருதவில்லை. இதை ஒரு பயங்கரவாதப் பிரச்சினையாகவோ, சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாகவோ எடுத்து, இராணுவ ரீதியில் தீர்வு கண்டுவிடலாம் என்று எண்ணுகின்றது. தலைவர் பிரபாகரனை அழிப்பதன் மூலமோ, விடுதலைப் புலிகளை நிர்மூலம் ஆக்குவதன் மூலமோ இதனைச் சாதிக்கலாம் என்று நிச்சயமாக நம்புகின்றது. இதைவிட தீர்வு என்று சொல்வதற்கு சிறீலங்கா அரசிடம் ஒன்றுமேயில்லை. சிறீலங்கா அரசும், ஏனைய தமிழ்க் குழுக்களும், நடுநிலையாளர்கள் என்று கூறுபவர்களும் வைக்கும் மாகாணசபைத் திட்டம், அதிகாரத்தை பரவலாக்குகிறது என்று சொல்வதைவிட, அதிகாரத்தை கொழும்பில் குவிக்கின்றது என்பதே பொருந்தும். நிர்வாக, சட்டவாக்க, நீதி, அதிகாரங்கள் சிறீலங்காவின் ஒற்றையாட்சி யாப்பின் கீழ், நிரந்தரச் சிங்களப் பெரும்பான்மையைக் கொண்ட நாடாளுமன்றத்திடமும், சிங்கள ஜனாதிபதியிடமும் குவிக்கப்படுகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மை. இதன் விளைவாகவே, வரதராஜப்பெருமாளின் பொம்மை ஆட்சி, மாகாண சபைக்கு கதிரை, மேசை வாங்கவே சிங்கள அரசாங்கத்தின் அனுமதி கிடைக்காதுள்ளதாக அங்கலாய்த்து அலறியது. பேச்சுவார்த்தை, சிறீலங்கா அரசின் ஒற்றையாட்சி யாப்பின் உள்ளேயே நடைபெறவேண்டும் என்று வலியுறுத்துகின்றபோது, தீர்வு என்ற போர்வையில் அடிமை விலங்கை, அரசியல் சட்ட ரீதியில் மேலும் இறுக்க சிறீலங்கா அரசு முனைகிறது. அதனை ஏற்றுக்கொள்ளாது எதிர்த்தால், இராணுவ ரீதியில் அடக்கி, அதனைத் திணிக்கப் போவதாகவும், இராணுவ மேலாதிக்கம் செய்யப்போவதாகவும் மிரட்டுவதோடு, மிரட்டலைச் சாதிக்கவும் துணிந்து நிற்கிறது. ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தீர்வு என்று கூறும்போது, மாகாணசபைத் திட்டமே அதிகபட்சத் தீர்வாக அமைகிறது. தற்போதைய சிறீலங்கா யாப்பின் கீழ் இத்திட்டத்திற்குமேல் ஒரு அடிகூட நகர முடியாது என்பது தெளிவான விடயம். மாகாணசபைத் திட்டம் குறித்து உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு இதற்குச் சரியான எடுத்துக்காட்டாக உள்ளது. மாகாணசபை சிறீலங்காவின் ஒற்றையாட்சி முறைக்குட்பட்டதே என்ற உயர்

www.tamilarangam.net



நீதிமன்றத் தீர்ப்பு மயிரிழையிலேயே வெற்றிபெற்றது. ஏழு நீதிபதிகளுள், நால்வர் இவ்வாறு தீர்ப்பளிக்க, மிகுதி மூவர், (எதுவித சாரமுமற்ற) மாகாணசபை, ஒற்றையாட்சி அமைப்பை மீறுவதாகவும், நாடாளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடனும், சர்வஜன வாக்கெடுப்பின் மூலமும் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் தீர்ப்பளித்தனர். மாகாணசபைத் திட்டத்தைவிட மேலான தீர்வொன்றை வழங்க முடியாதவாறு சிங்கள இனவாதம் வரையறைகளை வகுத்துவிட்ட நிலையில், மாகாண சபைக்குக் குறைவான ஒன்றையே, சிறீலங்கா அரசாங்கம் எப்பொழுதும் வழங்க முன்வரும் என்பதும் நிச்சயமாகத் தெரிகின்றது.



இந்தப் பகைப்புலனிலேயே நாம் தொண்டமானின் நடவடிக்கைகளை, அவரது சமாதான முயற்சிகளை(?) ஆராய வேண்டும். தொண்டமான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவராகவும், அரசாங்க அமைச்சராகவும் இருக்கிறார். இந்த இரட்டை வேடத்தில் தொண்டமானை நடிக்க வைத்து, சிறீலங்கா அரசாங்கத்தால் சமாதான நாடகம் அரங்கேற்றப்படுகின்றது. மாகாண சபையையும், முன்நிபந்தனைகளையும் உள்ளடக்கிய அரசாங்கத்தின் சமாதானத் திட்டம், தொண்டமான் என்ற ஊது குழல் மூலம் வெளியே கக்கப்படுகின்றது. இக்கைங்கரியத்தில் தொண்டமானின் இரட்டை வேடம் சிறப்பாகப் பயன் அளிக்கிறது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் என்ற கோதாவில், இல்லாதது, இருப்பது எல்லாவற்றையும் கூட்டிச் சேர்த்துக்கூறி தமிழர்களுக்கு உரிமைகளை வாரிவழங்குவதாகக் காட்டிக் கொள்கின்றார். அதேவேளை, அரசாங்கத்தின் அமைச்சர் என்ற ரீதியில், இது அரசாங்கத்தின் வள்ளன்மை என்று உலகின் முன் நிரூபிக்கவும் முயல்கின்றார். இரண்டும் கெட்டான் நிலையில் இவர் இடைப்பட்ட பிறவி என்பதும், இவருடைய சமாதானத் திட்டம், காற்றடைத்த வெறும் பை என்பதும் அறிவார்ந்த தமிழ் மக்களுக்கு உடனே புரியாததொன்றல்ல. குடியுரிமை, வீட்டுரிமை, கல்வி உரிமை, தொழில் உரிமை என்ற அளவில் இருக்கும் மலையகத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் தரத்திற்கு தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைக் கீழிறக்குவதும் அரசின் நோக்கமாக உள்ளது.

அரசாங்கத்தின் இத்திட்டம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் திட்டம் என்றே வலியுறுத்தப்படுவதால் இரண்டு நன்மைகள் அரசாங்கத்திற்கு உள்ளன. இத்திட்டம் விடுதலைப் புலிகளால் ஏற்றுக் கொள்ளப்படுமிடத்து, அரசாங்கம், இது தனது திட்டமல்ல எனவும், காங்கிரஸின் திட்டமே எனவும் வலியுறுத்தி, இத்திட்டத்தில் திருத்தங்களைச் செய்து, வழங்கப்பட்டுள்ள சில சலுகைகளை மேலும் குறைப்பதற்கு வழி உள்ளது. விடுதலைப் புலிகள் இதனை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அரசாங்க அமைச்சரால் வழங்கப்பட்ட சிறந்த திட்டத்தை விடுதலைப் புலிகள் நிராகரித்து விட்டார்கள் என்று உலகிற்குக் காட்டலாம். இது எவ்வாறு இருப்பினும் ஒரு உண்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாக உள்ளது. அதாவது, இத்திட்டம் சிறீலங்கா அரசின் ஒற்றையாட்சி யாப்பினுள் அடங்குகின்றது என்பதும், சிறீலங்காவின் நிபந்தனைகளை உள்ளடக்கியதும் என்பதுமாகும். இத்திட்டம் குறித்து தொண்டமானோ, தமிழ்க் குழுக்களோ, அரசாங்கமோ, நடுநிலையாளர் என்று சொல்பவர்களோ, எதிர்க் கட்சியினரோ, பாராட்டியோ, எதிர்த்தோ கூறிய போதிலும் மாகாண சபை ஆட்சியை உச்சமாகக் கொண்ட இத்திட்டத்தை ஆதாரமாகக் கொள்ளவோ, ஸ்ரீலங்கா அரசின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளவோ விடுதலைப் புலிகள் தயாராக இல்லை என்பது தெட்டனப் புரிகின்றது.

இத்திட்டத்தின் வரம்பு என்னவென்று தெரிந்த நிலையில், இத்திட்டம் குறித்து தொண்டைமான் மற்றும் ஏனையோரால் வாயில் வந்தவாறு பத்திரிகைகளுக்குக் கூறுவைகள் குறித்து நாம் ஆராய்வதில் எவ்வித பயனுமில்லை. எனவேதான் விடுதலைப் புலித் தலைமைப் பீடம் அத்திட்டம் குறித்து எவ்வித கருத்தும் தெரிவிக்காமல், தொண்டைமானை நேரடிப் பேச்சுவார்த்தைக்கு யாழ்ப்பாணத்திற்கு அழைத்தது. இந்த கர்வு அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்குத் தள்ளி அழைப்பைப் புறக்கணிக்குமாறு செய்தது. விடுதலைப் புலிகள் இவ்வருடம் தொடக்கத்திலிருந்து ஸ்ரீலங்கா அரசாங்கத்தை சமாதான பேச்சுவார்த்தைக்கு அழைத்தவாறே உள்ளனர். சமாதான பேச்சுவார்த்தைக்குரிய உகந்த சூழ்நிலையை ஏற்படுத்த யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவரவும், அதற்கான கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்தவும் அவர்கள் தயாராக இருந்தனர். அண்மையில் தலைவர் பிரபாகரன், BBC நிருபருக்கு அளித்த பேட்டியிலும், ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இராணுவத்தீர்வு முயற்சி சரிவராது எனவும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

தமிழ் மக்களின் தாயக பூமி, அவர்கள் ஒரு தேசிய இனம், அவர்களது தேசிய சுயநிர்ணய உரிமை ஆகியவற்றின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் எனவும் விடுதலைப் புலிகள் வலியுறுத்தியிருந்தனர். ஸ்ரீலங்கா அரசின் முன்நிபந்தனைகளையும்

www.tamilarangam.net



அவர்கள் நிராகரித்திருந்தனர். தமிழ் மக்களின் பாதுகாப்பிற்காக வும், உரிமை மீட்பிற்காகவும் தொடங்கப்பட்ட ஆயுதப் போராட் டம், தேசிய இன ஒடுக்குமுறை யின் முடிவுரை தொடரும் என அறுதியிட்டுக் கூறினர். ஆயுதங் களைக் கீழே போடுவது என்ற கேள்விக்கே இடமில்லை என் றும், தமிழ் தேசிய இனப்பிரச் சனை தீர்க்கப்படும் போது, ஆயு தங்களின் கையிருப்பு சட்டரீதியாக் கப்படுவதே சாத்தியம் எனவும் வலியுறுத்தினர்.

தற்போது ஆயுத முரண்பாட்டில் இருக்கின்ற ஸ்ரீ லங்கா அரசாங் கமும், விடுதலைப் புலிகளுமே பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டுமெனவும், தேசிய சுயநிர் ணய உரிமைப் போராட்டத்தைக் கைவிட்டு அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகின்ற ஏனைய தமிழ்க் குழுக்கள் தீர்வின் பின்னர் நடைபெறுகின்ற ஜனநாய கத் தேர்தல்களில் பங்கு கொண்டு தங்களுக்குரிய மக்கள் ஆதரவை நிலைநாட்டலாம் என்றும் தெரிவித் தனர். விடுதலைப் புலிகளுக்கு மக்கள் ஆதரவு உண்டா என்பதை ஜனநாயக ரீதியில் நிரூபிக்க வேண்டுமாயின், தமிழரின் தாய கப் பகுதியில் சர்வஜன வாக்கெ டுப்பு, சர்வதேச மேற்பார்வையின் கீழ் வைக்குமாறும் கோரினர்.

பேச்சுவார்த்தையின் நடைமுறை யைப் பொறுத்தவரையில் விடுத லைப் புலிகளின் தலைமைப்பீடம் மிக உறுதியான கொள்கைகளை வைத்துள்ளது. விடுதலைப் புலி களும், அரசாங்கமுமே நேரடி யான பேச்சுவார்த்தையினை நடத் தவேண்டும். இரு பகுதியினரதும் சமத்துவ அடிப்படையில் பேச்சு இடம் பெறவேண்டும். சர்வதேச மத்தியஸ்தம் வேண்டும்; காணப் படும் தீர்வு அதனால் உத்தரவா தப்படல் வேண்டும். வெளிநா டொன்றின் தலைநகர் ஒன்றில் வைப்பது குறித்தும் தமது சம்ம தத்தை தெரிவித்துள்ளனர். யுத்த நிறுத்தமும், யுத்த நிறுத்தக் கண் காணிப்பும் சர்வதேச அமைப்பொன் றினால் ஏற்படுவதும் விடுதலைப் புலிகளுக்கு ஏற்றதாக உள்ளது. சமாதானத் தீர்வு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகள் அடிப்ப டையில் ஏற்படுதலே இறுதியான தாகவும், நிரந்தரமானதாகவும் இருக்கும் என்பது விடுதலைப் புலிகளின் அசைக்க முடியாத கருத்தாக உள்ளது.

மேலே குறித்த அடிப்படையில், திட்டம் ஒன்றை முன்வைக்கவும் விடுதலைப் புலிகள் ஆராய்ந்து வருகின்றனர். அதாவது எவ்வாறு இரண்டு இறைமையுள்ள தேசங் கள் இணைந்து செயற்படுவது என்பது குறித்து, எமது பரும்படி யான சூழ்நிலைக் கேற்ற திட்டம் ஒன்று ஆராயப்பட்டு வருகின்றது. ஐரோப்பிய சமூக நாடுகளைப் போன்றோ, சோவியத் குடியரசு களைப் போன்றோ பொருளாதார, அரசியல் கூட்டை ஏற்படுத்த லாமா என்பதே அத்திட்டத்தின் அடி ஆதாரக் கேள்வியாகும். எந் தெந்த விடயத்தில் கூட்டுச் செயற் பாடு என்பதும், எவ்விடயங்களில் புறம்பான செயற்பாடுகள் என்ப தும், என்ன அமைப்பு முறை என் பதும், பொதுவான ஒப்பந்தம் ஒன் றின் மூலம் இது சாத்தியமா என் பதும் ஆராய்வுக்குரிய விடயங்க ளாக உள்ளன. வெளிவிவகாரம், ஐ.நா சபையில் பிரதிநிதித்துவம், ஆயுதப்படை ஆகியவை குறித்து ஆழமான சிந்தனை வேண்டப்படு கின்றது. தமிழ், சிங்கள மக்கள், சுதந்திரமான இரு தேசங்களாக சமத்துவ அடிப்படையில், இணக் கத்துடனும், பரஸ்பர ஒத்துழைப் புடனும், சுபீட்சத்துடனும் வாழ வேண்டுமாயின், நவீன சூழலுக் கும், உலக மாறுதல்களுக்கும், யதார்த்த நிலைமைகளுக்கும், நடைமுறைக்கும் ஏற்றதான புதிய கொள்கைகள் வகுக்கப்படுவ தோடு, அதன் அடிப்படையில், புதிய திட்டமும் வரையப்பட வேண்டும். ■




www.tamilarangam.net



"இன்று நாம் கொண்டாடிவரும் முத்தமிழ் விழா எமது மக்களது தேசிய எழுச்சியின் அபாரமான வெளிப்பாடு என்றே சொல்லவேண்டும். போராட்ட சூழலில், எல்லைகளில் எதிரியின் போர்முரசு கேட்கும் யுத்த காலத்தில் சமுத்திரம்போல் திரண்டுவந்து பல்லாயிரம் மக்கள் முத்தமிழ் விழாவில் பங்குபற்றுகின்றார்கள் என்றால் அது எமது மக்களின் திடசங்கற்பத்தை, உறுதிப்பாட்டை, சுதந்திர அறைகூவலை தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இந்த சுதந்திர அறைகூவல் எமது எதிரியின் காதுகளுக்கு எட்டாமல் இல்லை. சீற்றம் கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக்குரலை சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும் அசட்டை செய்யமுடியாது."

தலைவர் பிரபாகரன்.





www.tamilarangam.net





எங்கள் மண்ணின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு
மாந்தரும் புலிகளின் நிலைகளாம் புலிகளாம்.



www.tamilarangam.net





30. 08. 91 அன்று B. B. C செய்தி முகவர் கிறிஸ் தோமர் மொறிஸுக்கு தலைவர் பிரபாகரன் வழங்கிய செவ்வி

**கேள்வி:**
கிழக்கு மாகாண நிலைமை பற்றி குறிப்பாக இராணுவ நிலை பற்றி நீங்கள் கருதுவது என்ன?

**பதில்:**
*கிழக்கு மாகாணத்தில் உள்ள இராணுவ நிலைமை மிகவும் சிக்கலானது. இப்பகுதியில் பெரும்பான்மையாக தமிழ் மக்களும், சிங்கள, முஸ்லீம் மக்கள் சிறுபான்மையாகவும் வாழ்கின்றார்கள். திருகோணமலையிலும், அம்பாறையிலும் நிறைய சிங்கள குடியேற்றங்கள் இருக்கின்றன. இவற்றை பாதுகாக்கும் நோக்கத்தோடு பெரும் அளவில் இராணுவமும், ஊர்காவற்படைகளும் குவிக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாண கரையோரமாக பெருமளவில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அப்படியிருந்தும் கிழக்கு மாகாணம் சிங்கள அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது எனக் கூறமுடியாது. கிழக்கில் எமது ஆயுத நடவடிக்கைகள் தொடர்ந்து நடக்கின்றன. எமது போராளிகள் எல்லாப் பகுதிகளிலும் நடமாடித் திரிகின்றார்கள். கிராமப் புறங்களும், காட்டுப் பகுதிகளும் எமது கட்டுப்பாட்டில் இருக்கின்றன. கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகளை விரட்டி விட்டோம் என அரசு கூறுவது முற்றிலும் தவறு.*

**கேள்வி:**
1990 ஜூன் திங்களில் நீங்கள் இருந்த நிலைமையிலும் பார்க்க இப்போது மோசமான நிலையில் அல்லவா இருக்கின்றீர்கள்?

**பதில்:**
*யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் கிழக்கு மாகாணம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது என்பது முற்றிலும் தவறு. யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் நீண்ட காலமாக இந்திய துருப்புக்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. இந்திய துருப்புக்கள் வெளியேறிய பின்னர் இராணுவமும், ஊர்காவற்படையும் அப்பகுதியில் நிலை கொண்டு இருந்தன. கிழக்கு மாகாணம் விடுதலைப் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது எனக் கூறமுடியாது.*

**கேள்வி:**
ஆனையிறவுப் போரில் தமக்கு பெரும் வெற்றி கிடைத்துள்ளது என இராணுவம் கூறுகின்றதே; போர் உத்தி என்ற முறையில் நீங்கள் பிழையான உத்தியை கையாண்டதாகக் கருதுகின்றீர்களா?

**பதில்:**
*ஆனையிறவுப் போர் பெரும் வெற்றி என சிங்கள அரசு கூறுவது முழுப்பொய்ப் பிரச்சாரம். எமது வெற்றிகரமான தாக்குதலினால் ஆனையிறவுத் தளம் வீழ்ச்சியடையும் நிலையில் இருந்தது. 800 இராணுவ வீரர்கள் எமது முற்றுகையில் சிக்கிக் கொண்டனர். இவர்களை மீட்பதற்காக 8000 பேர் கொண்ட பெரும் தாக்குதலை நடத்த சிங்கள அரசு நிர்ப்பந்திக்கப்பட்டது. இத்தாக்குதலில் சிங்கள அரசுக்கு எப்போதும் இல்லாதளவு பெரும் இழப்புக்கள் ஏற்பட்டன. 5 மைல் தூரம் படைகளை நகர்த்த 24 நாட்கள் எடுத்தது. இதனை வெற்றி என எக்காளம் இடுவது சிறுபிள்ளைத் தனமானது. ஒரு பெரிய மரபுவழிப் போரை நேருக்கு நேர் எதிர் கொள்ளும் வளர்ச்சியை விடுதலைப் புலிகள் இயக்கம் அடைந்திருக்கின்றது. ஆனையிறவு இதற்கு ஓர் நல்ல எடுத்துக் காட்டு.*

**கேள்வி:**
விடுதலைப் புலிப்படையை மரபு முறையிலான இராணுவமாக விரிவு படுத்த நீங்கள் எடுத்து வரும் முயற்சி பற்றி எடுத்துக் கூறுவீர்களா? இது புலிப்படையின் முன்னேற்றத்திற்கு எவ்வளவு முக்கியமானது?

**பதில்:**
*சிங்கள அரசுக்கு எதிரான எமது ஆயுதப் போராட்டம் 15 ஆண்டுகளுக்கு மேலான நீண்ட வரலாற்றைக் கொண்டது. இந்த நீண்ட கால போரில் நாம் படிப்படியாக பெரும் வளர்ச்சியை அடைந்திருக்கின்றோம்.*

*நீண்ட காலமாக கொரில்லாப் போர்முறையைக் கையாண்டு வந்த நாம் இப்பொழுது மரபு வழியிலான இராணுவமாக மாறி வருகின்றோம். இராணுவ ரீதியில் இது ஒரு பெரிய வளர்ச்சியைக் குறிக்கிறது. இந்த வளர்ச்சி எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிதான். இந்த வளர்ச்சி எமது போராட்டத்தின் பெரும் திருப்பு முனையாகவும் அமைகின்றது. இந்த எமது வளர்ச்சியின் மூலம் சிங்கள அரசு ஒரு பாடத்தை கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது இராணுவ நடவடிக்கைகளின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காண முடியாது என்பதுதான்.*

**கேள்வி:**
உங்கள் படையின் அளவு விரிவு பட்டு வரும் இந்த நேரத்தில், நீங்கள் படையில் சிறுவர்களையும், சிறுமிகளையும் சேர்த்துக் கொள்வதாக கண்டனங்கள், குற்றச்

www.tamilarangam.net



சாட்டுக்கள் எழுந்துள்ளன. நீங்கள் இளம் வயது ஆட்களை ஏன் சேர்த்துக் கொள்கின்றீர்கள்? இப்படிச் சேர்த்துக் கொள்பவர்கள் எத்தனை வயதில் உங்கள் படையில் போர் முனைக்கு செல்கிறார்கள்?

**பதில்:**

*நாம் பலவந்தமாக எவரையும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதில்லை. அரச பயங்கரவாத ஒடுக்குமுறையினாலும், எமது சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களினாலும் சிறுவர்கள் தாமாகவே எமது இயக்கத்தில் சேர்கின்றார்கள் என்பதுதான் உண்மை. அது மட்டுமல்லாது பல பெற்றோர்கள் எமது கூட்ட மேடைகளிலேயே தமது சிறு புதல்வர்களையும், புதல்விகளையும் எம்மிடம் ஒப்படைக்கின்றார்கள். அப்படி இருந்தும் இந்த சிறுவர்களுக்கும் நாம் கல்வி வசதி செய்து கொடுக்கின்றோம். தொழில் அறிவை வளர்த்து வருகின்றோம். சிறு வயதானவர்களை நாம் போர்க் களத்திற்கு அனுப்புவதில்லை.*

**கேள்வி:**

இந்தியாவுக்கும் உங்களுக்கும் இடைப்பட்ட உறவைப் பற்றி பார்ப்போம்? இந்த உறவு இப்போது மோசமான நிலையில் இருக்கின்றது. இது உங்களுக்கு கவலையை தருகிறதா?

**பதில்:**

*நீண்டகாலமாகவே எமக்கும் இந்தியாவுக்கும் மத்தியிலான உறவில் பிரச்சனைகள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. 1983ல் இந்திய அரசு எமது பிரச்சனையில் தலையிட்டது. ஆயுத பயிற்சி கொடுத்து பல கும்பல்களை உருவாக்கியது. பின்னர் 1987ல் சிங்கள அரசுடன் ஒரு ஒப்பந்தம் செய்து, அதனை எமது மக்கள் மீது திணிக்க முயன்றது. அதற்கு நாம் எதிர்ப்பு தெரிவித்ததும் எம் மீது ஒரு யுத்தத்தை ஏவி விட்டது. இப்படியாக இந்திய அரசு தனது சொந்த நலனை பேண முயன்று வந்தது. நாம் எமது மக்களின் நலனை முதன்மைபடுத்திய போது எமக்கும் இந்திய அரசுக்கும் முரண்பாடும், பகையும் ஏற்பட்டது. இந்த நீண்ட கசப்பான வரலாற்றின் தொடர்ச்சியாகவே எமது இயக்கத்திற்கு எதிராக இந்திய அரசு செயற்படுகின்றது. இந்தியாவின் இந்த அணுகு முறை எமக்கு கவலையையும், ஏமாற்றத்தையும் கொடுக்கத்தான் செய்கின்றது.*

**கேள்வி:**

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிப் படையினரின் நடவடிக்கைகள் நசுக்கப்பட்டு வருவது பற்றி உங்களால் ஏதாவது கூறமுடியுமா? இலங்கையில் நீங்கள் நடாத்தும் போராட்டம் தமிழ் நாட்டில் உங்களுக்கு எதிராக எடுத்து வரும் நடவடிக்கைகளால் எந்த வகையில் மிக மோசமாக பாதிப்படைகிறது?

**பதில்:**

*நீண்டகாலமாகவே தமிழ் நாட்டிலும் விடுதலைப் புலிகளை பகடைக்காயாக வைத்தே அரசியல் சதுரங்க ஆட்டம் நடைபெற்று வருகின்றது. தமிழ் நாட்டு மக்களை எமது இயக்கத்திற்கு எதிராகவும், எமது சுதந்திரப் போராட்டத்திற்கு எதிராகவும் திருப்பிவிட இந்திய மத்திய அரசும், தமிழ் நாட்டு அரசும் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றன. எமது இயக்கத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தத் திட்டமிட்ட முறையில் விஷம பிரசாரங்கள் நடைபெற்று வருகின்றன. எனினும் தமிழ் நாட்டில் பரந்து பட்ட மக்கள் எமது இயக்கத்திற்கும், எமது போராட்டத்திற்கும் ஆதரவாக இருக்கின்றார்கள். இந்த மக்களின் ஆதரவு இருக்கும் வரை எமது போராட்டத்திற்கு பாதிப்பு ஏற்படப் போவதில்லை.*

**கேள்வி:**

ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என நீங்கள் கூறி வருவது எமக்குத் தெரியும். எனினும் இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் நீங்கள் தான் இதற்குப் பொறுப்பு என திடமாக நம்புவது போல் தெரிகின்றது. இதன் காரணமாக லண்டனில் உள்ள உங்கள் பிரதிநிதி கிட்டு அவர்கள் பிரிட்டிஷ் அரசினால் பிரிட்டனை விட்டு வெளியேற்றப்பட்டு இருக்கின்றார். உலக அரங்கின் உணர்வலைகள், கருத்துக்கள் உங்களுக்கு எதிராக திரும்புகின்றன என நீங்கள் கவலைப்படுகின்றீர்களா?

**பதில்:**

*ராஜீவ் காந்தியின் கொலைக்கும் எமது இயக்கத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இந்தக் குற்றச்சாட்டு இன்றும் நிரூபிக்கப்படவில்லை, இந்த கொலைக் குற்றச்சாட்டை எம் மீது சுமத்தி சர்வதேச ரீதியாக எமது இயக்கத்தை களங்கப் படுத்த இந்திய அரசு முயற்சித்து வருகின்றது.*

*கிட்டுவின் விடயத்தில் பிரித்தானிய அரசு நடந்து கொண்ட விதம், எமது மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கின்றது. வைத்திய சிகிச்சைக்காக லண்டன் செல்வதற்காக பிரித்தானிய தூதரகமே அனுமதி வழங்கியிருந்தது.*

*கிட்டு ஒரு அங்கவீனர், ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதி என்று தெரிந்தும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது ஒரு பொறுப்பற்றதும், மனிதாபிமானமற்றதுமான செயலாகும்.*

**கேள்வி:**

LTTE ன் அரசியல் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டும் கூட புலிப்படையினர் முக்கியமாக ஓர் இரக்கமற்ற இராணுவ அமைப்பு என இலங்கையில் உங்களை எதிர்த்துக் குரல் எழுப்புபவர்கள் கூறுகின்றனர். உங்கள் அரசியல் பிரிவின் பங்கு, பணி எப்படிப் பட்டது என கூறமுடியுமா?

**பதில்:**

*அப்படிச் சொல்லுவது முற்றிலும் தவறு. நாம் ஓர் பிரமாண்டமான அரசியல் அமைப்பைக் கட்டி எழுப்பியுள்ளோம். எமது மக்களிடையே சிவில் நிர்வாகம், உணவு உற்பத்தி, நிவாரணம், சமூகசேவை, அகதிகள் சேவை*

www.tamilarangam.net



போன்ற விடயங்களை எமது அரசியல் பிரிவே கவனித்து வருகின்றது. எமது பகுதியில் உள்ள மக்களின் அன்றாட தேவைகளில் எமது அரசியல் பிரிவே பெருமளவில் பங்கு வகித்து வருகின்றது என்பது தான் உண்மை.

**கேள்வி:**
கொழும்பில் ஜனாதிபதி பிரேமதாசா ஆட்சிக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றி உங்கள் கருத்து என்ன? கொழும்பில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி தமிழர் பிரச்சனையில் ஏதாவது பாதிப்பை ஏற்படுத்தும் என நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:**
நிலைமையை நாம் இப்போது கவனமாக அவதானித்து வருகிறோம். இப்போதைக்கு இதுபற்றி அபிப்பிராயம் எதுவும் கூறமுடியாது.

**கேள்வி:**
இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்படுவதற்கான பல முயற்சிகள் கடந்த சில மாதங்களாக எடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்த சில மாதங்களில் இப்படிப் பட்ட முயற்சிகள் வெற்றியடைவதற்கான வாய்ப்புக்கள் உண்டு என நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:**
நாம் எப்போதும் சமாதான பேச்சுகளுக்கு தயாராக இருப்பதாகவே கூறிவருகிறோம். பேச்சுக்கள் நிபந்தனையற்றதாக இருக்கவேண்டும் என்பதை நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

- கிறிஸ்தோபர் மொறிஸ்

---

## அமைச்சர் தொண்டமான் சொல்கிறார்....

**"அரசு விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும், மற்றய குழுக்கள் முக்கியமானவை அல்ல."**

**இன்றைய நெருக்கடிக்குதீர்வைக் கொண்டுவரக்கூடியவர்கள், விடுதலைப் புலிகளும், அரசுமே. என அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான எஸ். தொண்டமான் கூறினார். மேலும் அவர் கூறியதாவது, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு போர்நிறுத்தம் ஓர் நிபந்தனையல்ல.**

**விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகளா அல்லது விடுதலைப் போராளிகளா என்ற கேள்விக்கு, தற்போது வடக்கு கிழக்கு மக்களுக்காக போராடிக் கொண்டிருப்பவர்கள் அவர்களே என்று அமைச்சர் தொண்டமான் வலியுறுத்திக் கூறினார். ஐக்கிய ராச்சியத்தில் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைக்கு அளித்த விசேட பேட்டியில் அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான தொண்டமான், இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வே சாத்தியமானது என்று கூறினார். அரசியல் தீர்வைக்காண அரசு விடுதலைப் புலிகளுடன் உடன் தொடர்புகொள்ளவேண்டும்; மற்றைய சில்லறைக் குழுக்களுடன் அல்ல. அரசியல் தீர்வைக் காண இந்தியா உதவ வேண்டும் என்றும் அவர் கூறினார்.**


**மற்றய குழுக்களும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளவேண்டும் என்பது அரசின் பேச்சுவார்த்தைக்கான நிபந்தனைகளில் ஒன்றாகும். தற்போதய சூழ்நிலையில் இது சாத்தியப்படமுடியாத ஒன்றாகும். எங்களுடைய மனதில் தோன்றுபவைகளுக்கே நாம் முதலிடம் கொடுக்கவேண்டும்; மற்றைய குழுக்கள் முக்கியமானவை அல்ல என்றும் அவர் கூறினார்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ARYAN INVASION-1500 B.C.




# தமிழர் நாகரிகம்


தமிழர்களின் தொன்மையான நாகரிகச் சிறப்புப் பற்றி, பல்வேறு நாட்டு மனிதவியல், மொழி, அகழ்வாய்வு அறிஞர்களால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் முடிவு பெறாதும், அவிழ்க்கப்படாத முடிச்சுக்களாகவும் உள்ளன. திருப்திகரமான ஆராய்வுகளை மேற்கொள்ளுவதற்கு தமிழர்களுக்கு என்றொரு சுதந்திர நாடு எங்கும் இல்லாமை இதற்கு முக்கிய காரணமாகும்.

ஆரம்பகால தமிழ் எழுத்து வடிவம் இந்தியாவிற்குள் ஆரியர் வருகைக்கு முன்னர் பன்நெடுங் காலமாகவே இருந்துள்ளது. உலகின் முதல் பஞ்சாங்கம் தமிழிலேயே தோன்றியதென்றும், உலகில் தற்போது பயன்பட்டுவரும் அராபிய எண்களுக்கு அடிப்படையே தமிழ் எண் வடிவங்கள் தான் என்றும் கூறுகின்றனர். இவற்றை மறுப்பாரும் உள்ளனர். சமஸ்கிருதத்தின் மூலமொழியான பிராகிருத எழுத்து வடிவமே, இந்தியாவில் முதலில் தோன்றிய எழுத்து வடிவமெனச் சிலர் கொள்கின்றனர். ஆரிய வழிவந்த மௌரிய மன்னர்களது காலத்திலேயே அதாவது கி. மு, 500ம் ஆண்டுக்கு பிற்பட்ட காலத்திலேயே பிராகிருத எழுத்து வடிவத்தை தமிழர் பெற்றனர் என்கின்றனர். ஆயினும், தமிழ் எழுத்து வடிவமாகிய தமிழி அல்லது தமிழ் பிராமி, கி. மு. 1500 ஆண்டளவில் ஆரியர் வருவதற்கு சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வழக்கத்தில் இருந்ததற்கான ஆதாரங்கள் மேலும் வெளிக்கொண்டுவரப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தொன்மையான தமிழ் மொழியின் தோற்றமும், அதன் பேச்சு வழக்கும், படிமுறையான எழுத்து வடிவங்களும் கட்டுக்கோப்பான இலக்கணத்திற்கும் சிறப்பான இலக்கியங்களுக்கும் முற்காலங்களிலேயே வழிவகுத்துள்ளன.

சாதாரண மக்களின் காதலையும், போரையும் இயற்கையுடன் இசைந்து அழகுற அமைத்து நவீன உலக இலக்கியங்களுக்கு ஈடாக விளங்கும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்க இலக்கிய நூல்களின் காலம் இன்றும் ஐயந்திரிபற வரையறுக்கப்படவில்லை. முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் இருந்த காலங்களும், இடங்களும் திண்ணியமாக முடிவு கட்டப்பட வில்லை.

University Museum, Philadelphia; Wide World



சிந்துவெளி நாகரிகத்தின் சிதைவுகள், மொகஞ்சதரோவில் காணப்பட்டது.

பொதுமக்களின் குளியலறை, மதசம்பிரதாயங்களின்போது பாவிக்கப்பட்டவையாக இருக்கலாம்.

அகப்பொருள், புறப்பொருள் என்று மக்களின் வாழ்க்கையை வகுத்து, நிலங்களையும் காலங்களையும் பிரித்து அரசனுக்கும், கடவுளுக்கும் முன்னிலை கொடுக்காது,

லெமூரியாக் கண்டம் எனப்படும் குமரிக்கண்டம், தற்போதைய குமரிமுனையின் தென்பகுதியில், அவுஸ்திரேலியா, மடகஸ்கார் வரை பரந்திருந்ததாகவும் அங்கு

www.tamilarangam.net



நாகரிக சிறப்புடைய மக்கள் வாழ்ந்தார்கள் எனவும் கூறப்படுகின்றது. சங்கங்கள் அமைத்து தமிழ் வளர்த்தார்கள் என்றும் விளம்பப்படுகின்றது. அக் குமரிக் கண்டம் கடல் கோள்களினால் அழிக்கப்பட்டதாகவும், அங்கிருந்த நாகரிகமும் அழிந்ததாகவும், இலக்கிய, கலைப் பொக்கிசங்களும் கடலுள் மறைந்து போனதாகவும் கூறினராயினும், இந்து சமுத்திரத்தின் ஆழத்துள் சென்று ஆராய்ச்சி செய்ய எவரும் முன்வரவில்லை. அந்த நாகரிகத்தின் சிறப்புக்கள், வளர்ச்சிகள், பெருமைகள் அனைத்தும் மர்மமாகவே உள்ளன. உலகத்தின் தலைசிறந்த நூல்களான திருக்குறள், தொல்காப்பிய இலக்கணம் ஆகியவற்றின் காலம் குறித்தும் குழப்பகரமான செய்திகள் வருகின்றன. தொல்காப்பியர் பாணினி என்ற சமஸ்கிருத இலக்கண ஆசிரியரை "கொப்பி" அடித்தார் என்று கூறுவோரும் உண்டு.

பரதக்கலைக்கு தமிழ் மக்களின் கூத்தே ஆதாரம் என்று அடித்துக் கூறுவோர் குறைவே. கர்நாடக சங்கீதம் தமிழ் இசை இல்லை என்று வாதாடுபவரும் உண்டு. கர்நாடகம் என்ற பிரதேசமே, வடக்கே ஆந்திராவின் எல்லையான கிருஷ்ணா நதியிலிருந்து தெற்கே குமரி முனை வரையுள்ள திராவிடப்பகுதிகளையே குறிக்கும். தற்போது அவ்வெல்லைக்குள் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், தெலுங்குதேசம் ஆகிய நாலு மாநிலங்கள் அடங்குகின்றன. முன்னைக்காலங்களில் சேர, சோழ, பாண்டிய மன்னர் ஆட்சிகளே இப்பகுதியில் நிலவின. விஜயநகர நாயக்க மன்னர் ஆட்சிக் காலத்தில் தெலுங்கு இசை மேதையான தியாகராஜர் போன்றவர்களால் தமிழிசையான கர்நாடக இசை வளம் பெற்றதேயொழிய, அது புதிய இசை வடிவம் இல்லை. அதேவேளை, இந்துஸ்தானி இசை இருப்பதும், அது அராபிய, ஈரானிய இசைவடிவங்களால் பாதிக்கப்பட்டிருப்பதும் கண்கூடு. இக்குழப்பங்களுக்கு, வரலாற்று திரிபுகளுக்கு, ஆரிய ஆசிரியர்கள் உரைத்த பொய்கள், கற்பனைகள், ஏமாற்றுக்கள், நயவஞ்சகச் சிருஷ்டிப்புக்களே காரணம்.





தற்போது பாகிஸ்தானின் ஒரு பகுதியாக இருக்கும், சிந்து நதியும், அதன் கிளைநதியான ரவியும் இருக்கும் இடங்களில் பெரும் சிறப்புடன் விளங்கிய மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய நாகரிகங்கள், அங்கு வாழ்ந்த மக்கள் குறித்து மேலும் ஆழமான ஆராய்ச்சிகள் இடம்பெறவில்லை. பெரும்பாலான அறிஞர்கள் கி. மு. 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட அந்நாகரிகம் திராவிட நாகரிகம் என்றும், கி. மு. 1500 ஆண்டளவில் மத்திய ஆசியாவிலிருந்து நாடோடி இனத்தவரான ஆரியர், இந்துகுஷ் மலையின் கைபர் கணவாய்க்கூடாக, இந்தியாவுக்குள் நுழையுமட்டும், அந்நாகரிகம் அங்கு இருந்ததாகவும் கூறுவர். ஆரியர் வருகைக்கு முன்பே, அம்மக்கள் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர். ஆரியர் வருகையுடன் அம்மக்கள் மேலும், தெற்கு நோக்கியும், கிழக்கே வங்கம் நோக்கியும் தள்ளப்பட்டனர்.

வெள்ளை நிறத்துப் போர்க்குணம் மிக்க, குதிரையேற்றம் தெரிந்த, இரும்பாயுதங்களைக் கையாளத் தெரிந்த ஆரியர், இந்தியாவில் பெரும்பகுதியில் பரவினராயினும், தென் இந்தியப்பகுதிகளை ஆக்கிரமிக்க அவர்களால் எப்போதும் முடிந்ததில்லை. தங்கள் ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதிகளில் சாதி அமைப்பு முறைகளைப் புகுத்தி, தமது ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்டினர். சிறுபான்மையினரான தமது இனம் சுதேச மக்களுடன் கலந்து அழிந்து போகாமல் பாதுகாக்க இது உதவியது. ஆளும் உரிமையையும், அறிவு பெறும் உரிமையையும் தம்மிடத்தே வைத்து, தொடர்ச்சியான ஆதிக்கத்தை நிலைநாட்டினர். தமக்கு சேவகம் செய்வதற்கென சூத்திரர் என்ற வகுப்பினராக, பெரும்பான்மை மக்களை வகைப்படுத்தினர். சூத்திரர் என்ற கீழான நிலையில் வைக்கவும் தகுதியற்றவர்களாக, இன்னும் ஏராளமானோரை, பேய்கள், பூதங்கள், மிருகங்கள் என்ற நிலையில் வைத்திருந்தனர். இப்பிரித்தாளும் தந்திரம் இப்போதும் நவீன அரசியலில் மிகத்திறம்படக் கையாளப் படுகின்றது.

திராவிடர் என்று கூறும்போது, தமிழரும் உள்ளடங்கிய கறுப்பு நிற, 23 மக்கள் பிரிவினர் குறிக்கப்படுகின்றனர். சிந்து நதிக்கரையிலிருந்து மக்கள், தெற்கே விந்திய மலையைக் கடந்து வந்த போது, தென்பகுதியில் அப்போது இருந்தவர்களும் நாகரீக வளர்ச்சியுடையவர்களாகவே இருந்தார்கள். நகரங்களை அமைத்தும், அரசாட்சிகளை ஏற்படுத்தியும், பயிர்ச் செய்கையிலும், கடல் வாணிபத்திலும் ஈடுபட்டிருந்தனர். இரும்பாயுதங்களை அவர்கள் உபயோகப்படுத்தியதோடு, சித்திர வேலைப்பாடமைந்த மட்பாண்டங்களையும் பயன்படுத்தினர். இலட்சனைகளும், காசுப்புழக்கமும் வழக்கத்தில் இருந்துள்ளன. இறந்தோரை தாழியில் இட்டுப் புதைத்தலும், இறந்த வீரர்கட்கு நடுகல் வைத்தலும் சமுதாய வழக்கங்களாக இருந்துள்ளன. சிந்து வெளி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாகரிகத்திற்கு முற்பட்டதான குமரிக்கண்ட நாகரிகம் ஆராயப்படும் போதே சிந்துவெளி மக்கள் தெற்கே இடம் பெயர்ந்த போது, தென்பகுதியில் இருந்த மக்களின் நாகரிக வளர்ச்சியின் அளவு புலப்படும்.

அதேவேளை, சிந்துவெளி மக்கள் அல்லது ஐயந்திரிபற நிரூபிக்கப்படாத திராவிட மக்கள் தெற்கே இடம் பெயர்ந்த போது, அங்கே அப்போது நாகரிக வளர்ச்சி குன்றிய சில இன மரபுக் குழுக்கள் (TRIBALS) இருந்ததாகவும், பெரும் காடுகளுக்குள்ளும், மலைகளுக்குள்ளும் ஓடி ஒழிந்து கொண்டதாகவும் சில வரலாற்றாய்வாளர்களால் கூறப்படும் கருத்து மேலும் ஆராயப்பட வேண்டும். மனித வளர்ச்சியின் படிநிலையில், ஒஸ்ரலொயிட்ஸ் என்றழைக்கப்படும், ஆரம்பகால மனிதர்களும் அங்கிருந்தார்கள் என்று சொல்லப்படும் கருத்தையும் தட்டிக்கழிக்க முடியாது. ஆரியர் இந்தியாவினுள் நுழைந்த போது, நாகரிக வளர்ச்சியின் பல்வேறு படிமுறைகளில், கறுப்புநிறத் திராவிடர்களே சிந்து நதிமுதல் குமரிவரை, ஏன் இலங்கையையும் இணைத்த பரந்த இந்திய உபகண்ட நிலப்பரப்பில் இருந்ததான கூற்றையும் நாம் கவனிக்க வேண்டும். பலதர நாகரிக வளர்ச்சியில் இருந்த திராவிட மக்களே பல்வேறு வகையினராகப் பிரிக்கப்பட்டு பல்வேறு பெயர்களைத் தாங்கியிருந்தனர் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. இதன் மூலம், சிந்துவெளி மக்கள், எங்கிருந்தோ வந்தார்கள், எங்கோ போனார்கள் என்ற ரீதியில் வைக்கப்படும் கருத்துக்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கலாம்.

சிந்து வெளி நாகரிகம் மிக உயர்ந்தது; உன்னதமானது. செங்கல்லால் அமைந்த மாடிவீடுகள், ஒழுங்கமைக்கப்பட்ட வீதிகள், பொதுக்குளியலறைகள், கழிவுநீர் வாய்க்கால் முறைகள் அமைந்த நகர்புற நாகரிகமாக இருந்துள்ளது. பொன், வெள்ளி, இரும்பு ஆகியவை ஆபரணமாக, ஆயுதமாக பயன்பட்டுள்ளன. அழகான சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. சித்திர வேலைப்பாடான மட்பாண்டங்களும், உருவங்களும் நுணுக்க வேலைப்பாடுகளுடன் கூடிய ஆபரணங்களும் பாவனையில் இருந்துள்ளன. எழுத்து வடிவம் இருந்துள்ளது. ஆயினும் அவ்வெழுத்துக்கள் இன்னும் பொருளுரைக்கப் படாமலேயே உள்ளன. தமிழின் பழைய எழுத்து வடிவம் என்று இன்னும் வரையறுக்கப்படவில்லை. அங்கு வணங்கப்பட்ட கடவுள், திராவிடர்களின் தெய்வமாகிய சிவனை ஒத்ததாகவும், சிலர் சிவனே என்றும் கூறியுள்ளனராயினும் சிவ வழிபாடே அங்கு நடைபெற்றதாக உறுதியாகக் கூறுபவர் குறைவே.

அதேவேளை, இந்நாகரிகம் மத்திய கிழக்கில் உள்ள யூபிரதீஸ் நதியோரங்களில் இருந்த மொசப்பத்தேமியா வரை நீடித்திருந்ததாகக் கூறி, சுமேரிய நாகரிகத்திற்கும், சிந்துவெளி நாகரிகத்திற்கும் முடிச்சுப்போட எண்ணுபவர்களும் உண்டு. சுமேரியாவோடு சிந்துநதி மக்கள் வர்த்தகத் தொடர்பே வைத்திருந்தனர் என்பதைக்கூறி, அதற்கு ஆதாரமாக, சிந்துநதி கரை அகழ்வாராய்வின் போது கண்டெடுக்கப்பட்ட சுமேரிய நாணயங்களைக் காட்டுவர். இதன் மூலம், இரண்டு நாகரிகங்களும் ஒன்றே என வாதாட முன்வருபவர்களை மறுத்துரைத்துள்ளனர். சிந்துவெளி நாகரிகம், திராவிட நாகரிகம் இல்லையென்றும், அம்மக்களை யாரென்று நிர்ணயிக்க முடியவில்லை என்றும், ஆரியப்படையெடுப்பால் அல்ல, இயற்கையின் சீற்றத்தினாலும், வெள்ளப் பெருக்கினாலுமே சிந்துவெளி நாகரிகம் அழிவுற்றது என்றும் கூறுபவர்களும் உண்டு.

இத்தகைய முரண்பட்ட, குழப்பமான முடிவுகளை எடுப்பதில் இருந்து தவிர்க்க விஞ்ஞான ரீதியான, நடுநிலையான ஆராய்வுகள் மேலும், மேலும் இடம்பெற வேண்டும். உள்ளூர், சர்வதேச அரசியலும் உண்மைகளை மூடி மறைத்தும், திரித்தும், குறைத்தும், மிகைப்படுத்தியும் வெளியிடக் காரணமாக உள்ளன. எனவே, பல்நாட்டு, பல்துறை அறிஞர்கள், சங்கமாக அமைந்து பரந்து, விரிந்த, நுணுக்கமான ஆராய்வுகளை மேற்கொண்டு புதிர்களை அவிழ்த்து, சரியான முடிவுகளைக் கண்டு உண்மைக்கு வெளிச்சமிட வேண்டும். ■

***"மரணம் ஒரு தடவைதான் வரும். அதற்காக மானத்தை விற்றுச் சீவிக்க முடியுமா? இறப்புக்குப் பயந்து இனத்தையே அழியவிட முடியுமா?"***

**- திலீபன் -**

www.tamilarangam.net






விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. மாத்தையாவின் கிழக்கு மாகாணப் பயணத்தின் போது, அவரோடு அவரது பயணத்தில் பங்கெடுத்துக் கொண்ட பத்திரிகையாளர் ஒருவரின் பயணக் கட்டுரையில் இருந்து....

**இ**ந்தக் குழந்தையின் தகப்பனாரின் பெயர் என்ன என்று அந்த மூதாட்டியை விசாரித்தேன். 'யோகன்' என்றார். தொடர்ந்து ''என்டை இன்னுமொரு மகனையும் கொண்டு போனானுகள்'' என்று ஓலமிட்டார். யோகன், ராசன் என்ற இரு பிள்ளைகளையும் ஒரே நாளில் பிடித்தார்கள். அன்றிலிருந்து இந்தத்தாய் நாளாந்தம் இப்படியே... என்று ஒருவர் கூறினார். யோகன், ராசன் இருவரது தகப்பனாரின் பெயர் என்ன என்றேன். ''வேலுப்பிள்ளை'' என்றார். எங்கே கைது செய்யப்பட்டார்கள் என்று கேட்டேன் '' பல்கலைக்கழகத்தில் உள்ள அகதிமுகாமில்'' என்றார். மொத்தம் எத்தனை பேர் இவ்வாறு கைது செய்யபட்டனர் என்றேன் "146 பேர்" என்றார். தொடர்ந்தது எமது உரையாடல். தொடர்ந்து "இதற்குப்பிறகும் இப்படியான சம்பவங்கள் நடந்தனவா?" "ஆம், அடுத்ததடவை 17 பேர். அதற்குப் பிறகு 11 பேர்." "யார் கைது செய்தது?" முஸ்லிம் ஆட்களும், இராணுவமும் "ஏன் முஸ்லிம் ஆட்கள் என்று சொல்கிறீர்கள்? முஸ்லிம் ஊர்காவல் படையோ, அல்லது ஜிகாத் இயக்கமோ என்று சொல்லலாம் தானே?" "முஸ்லிம் ஆட்களே தான்." "சாதாரண முஸ்லிம் மக்கள் இப்படியான செயல்களில் இறங்குவார்களா? இப்படிச்செய்பவர்கள் முஸ்லிம் ஊர்காவல்படையாகத்தானே இருக்க வேண்டும்?" என்றேன். அதற்கு அவர் பதில் சொல்லத் தொடங்கினார். அவரது முகத்தில் சில மாற்றங்கள் தென்பட்டன.

''யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் உங்களால் இந்தப் பிரச்சனையை சரிவர விளங்கிக் கொள்ள முடியாது. அங்குள்ள நிலைமையை வைத்து இங்கேயும் அப்படியிருக்கும் என எண்ணாதீர்கள். இங்கு நிலைமை வேறு. தமிழர்களும் முஸ்லிம்களும் நீண்டகாலம் ஒன்றாக இருந்தார்கள் என்ற வகையில் ஒற்றுமை வேண்டும் என்பதை கருத்திற் கொண்டு நீங்கள் சில கொள்கைகளை வகுக்கலாம். அது தவறில்லை. ஆனால் யதார்த்தமான நிலைமை என்ன என்பதை கூர்ந்து கவனியுங்கள், அதற்குப்பிறகு நடைமுறையைப் பற்றிச் சிந்தியுங்கள். நாங்கள் நாளாந்தம் இந்த நரகவேதனையை அனுபவிப்பவர்கள். இது எமது உயிர்வாழ்வுக்கான பிரச்சினை. நான் ஒரு ஆசிரியன். அம்பாறை மாவட்டத்திலிருந்து இங்கு வந்திருக்கிறேன். அம்பாறை மாவட்டத்தில் இருந்து வந்த எவரையேனும் நீங்கள் கேட்டுப்பாருங்கள். ஒவ்வொருகுடும்பத்திலும் இரண்டுபேரையாவது இழுந்துபோயிருப்பாங்கள். இன்று சில கிராமங்களே இல்லை. அட்டப்பள்ளம், வீரமுனை, கல்முனை 3-ம் குறிச்சி... இந்தக் கிராமங்களிலெல்லாம் ஏற்கனவே வெளியேறியோரைத் தவிர இன்று எவரும் உயிருடன் இல்லை... நிறுத்தினார். மூச்சு வாங்கியது அவருக்கு. "நீங்கள் சொல்லுங்கள், நிலைமையை அறியத்தானே வந்திருக்கிறோம். நீங்கள் எங்களைக் கோபிக்கலாம். நாங்களும் உங்கள் பிள்ளைகள் தானே. சொல்லுங்கள்" மீண்டும் முடுக்கி விட்டேன்; மீண்டும் தொடர்ந்தார்.

"உதாரணத்துக்கு ஒரு சம்பவம், கல்முனையில் நடந்தது. 13 வயது சிறுமி ஒருத்தியை முஸ்லீம் ஆட்களும், இராணுவமும் பிடித்துக் கொண்டு போனார்கள். எட்டோ, ஒன்பதோ சரியாகத் தெரியவில்லை, அவ்வளவு பேர் கற்பழித்தார்கள். கற்பழிக்கப்பட்ட பிள்ளையை நிர்வாணமான நிலையில் முஸ்லிம் ஆட்களிடம் இராணுவம் ஒப்படைத்துவிட்டுச் சென்றது. அந்த நிலையில் மனிதனாய் பிறந்தவன் என்றால் என்ன செய்திருப்பார்கள்? ஆனால் அந்த மிருகங்கள் ஒரு பொது இடத்திற்குக் கொண்டுபோய் அங்கு நட்டிருந்த ஒரு கல்லை மூன்று தரம் சுற்றி வரச் சொன்னார்கள். பிள்ளையும் சுற்றி வந்தது. பாவிப்பயல்கள்! பள்ளிவாசலில் இருந்து வந்த மௌலவிகள், பொதுமக்கள் எல்லோருமாக தங்களுடைய இஸ்லாமிய முறைப்படி கல்லால் எறிந்து கொன்றார்களே! அந்தப் பிள்ளையை, மிருகத்தனமாகக் கற்பழிக்கப்பட்டு வந்த பிள்ளையை கல்லோடு கட்டி வைத்து கல்லால் எறிந்து கொல்லும் இவர்கள் எல்லாம் ஒரு மனிதர்களா? எந்த மனசாட்சி உடையவன் இதை ஏற்றுக் கொள்ளுவான்? இவர்கள் முஸ்லிம் பொதுமக்கள் இல்லை; ஊர்காவல் படை, ஜிகாத் என்றா

www.tamilarangam.net



சொல்ல வேண்டும்? இவர்களோடு எல்லாம் சேர்ந்து வாழச் சொல்லு கிறீர்களா?" என்றார். பேச்சின் இறுதியில் குரல் உச்சத்துக்குப் போனது. பின்னர் குரலைத் தாழ்த்தி "தம்பி நீங்கள் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளலாம். என்ன இப்படி பேசுகிறார்களே என்று யோசிக்க லாம்." என்றவாறே தொடர்ந்தார்.

ழித்து வெட்டிக் கொன்றவர்களை, ரயர் போட்டுக் கொளுத்தினவர்க ளைக் காணும் போது, எங்களைத் தெருத்தெருவாக அடித்து அகதி யாக அனுப்பினவர்களை காணும் போது நாங்கள் என்ன செய் வோம்? சும்மாயிருக்க முடியுமா? ரோசமுள்ளவன் எவனாலும் முடி யாது, இந்தக்கட்டத்தில் உங்க ளால்தான் என்ன செய்ய முடியும்?

**தமிழர்களும் முஸ்லீம்களும் நீண் டகாலம் ஒன்றாக இருந்தார்கள் என்ற வகையில் ஒற்றுமை வேண் டும் என்பதை கருத்திற்கொண்டு நீங்கள் சில கொள்கைகளை வகுக்கலாம். அது தவறில்லை. ஆனால் யதார்த்தமான நிலைமை என்ன என்பதை கூர்ந்து கவனி யுங்கள்.**

**13 வயது சிறுமி ஒருத்தியை முஸ்லீம் ஆட் களும், இராணுவமும் பிடித்துக் கொண்டு போனார்கள். எட்டோ, ஒன்பதோ சரியாகத் தெரியவில்லை, அவ்வளவு பேர் கற்பழித் தார்கள். கற்பழிக்கப்பட்ட பிள்ளையை நிர் வாணமான நிலையில் முஸ்லீம் ஆட்களிடம் இராணுவம் ஒப்படைத்துவிட்டுச் சென்றது. அந்த நிலையில் மனிதனாய் பிறந்தவனென் றால் என்ன செய்திருப்பார்கள்? ஆனால் அந்த மிருகங்கள் ஒரு பொது இடத்திற்குக் கொண்டுபோய் அங்கு நட்டிருந்த ஒரு கல்லை மூன்று தரம் சுற்றி வரச் சொன்னார் கள். பிள்ளையும் சுற்றி வந்தது. பாவிப்பயல் கள்! பள்ளிவாசலில் இருந்து வந்த மௌல விகள், பொதுமக்கள் எல்லோருமாக தங் களுடைய இஸ்லாமிய முறைப்படி கல்லால் எறிந்து கொன்றார்களே! அந்தப் பிள் ளையை, மிருகத் தனமாக கற்பழிக்கப்பட்டு வந்த பிள்ளையை கல்லோடு கட்டிவைத்து கல்லால் எறிந்து கொல்லும் இவர்கள் ஒரு மனிதர்களா? எந்த மனசாட்சி உடையவன் இதை ஏற்றுக் கொள்ளுவான்?**

"நாளைக்கே அரசியல் நிலை மாறலாம். ஆனால் எங்கள் நிலைமை? எங்கள் குடும்பத்திலுள் ளவர்களை கொன்றவர்களைத் தெருவில் காணும் போது, எங்கள் மனைவி, பிள்ளைகளை கற்ப

கொஞ்சம் யதார்த்தத்தையும் சிந்தித் துப் பாருங்கள் தம்பி. இன்றைக்கு அம்பாறையில் இருந்து முழுத் தமிழர்களுமே வெளியேறியது மாதி ரித்தான், அகதி முகாம்களில் இருப்பவர்கள் கூட பிள்ளைக

ளோடு நடந்து இந்தப் பக்கம் வரமுடியாமல்தான் அதற்குள் ளேயே கிடந்து சாகிறார்கள்" என் றார். "அம்பாறையில் எவ்வளவு தமிழர்கள் கொல்லப்பட்டிருப்பார் கள்?" என்றேன். அதற்கு அவர் "1500 க்கு மேல். 1500 என்றவு டன் சின்னவிடயமாக நினைக்கா தீர்கள். இந்த மூன்றுமாத காலத் துக்குள்தான் 1500 பேர். அதுதான் இதில் முக்கிய விடயம். இதில் மூன்றில் ஒரு பகுதிதான் இரா ணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் பலியாகியிருப்பார்கள். மிகுதி முஸ் லீம் ஆட்களால் வெட்டிக் கொல் லப்பட்டவர்கள்" என்றார்.

"சரி, பல்கலைக்கழகத்தில் என்ன நடந்தது என்று சொல்லுங்களேன். அங்கே எவ்வளவு பேர் இருந்தார் கள்?" என்றேன். "அங்கே இருந் தவர்கள் 52,000 பேர்" என்றார். "52,000 பேரா? இவ்வளவு பேரும் எப்படி அங்கே இருக்கலாம்? பல் கலைக்கழகம் எவ்வளவு விஸ்தீர ணம் உள்ளது?" என்று கேட் டேன். "சுமார் 18 ஏக்கர் காணி யிருக்கும். அதற்குள்தான் அனைவரும் முடங்க வேண்டும். இதில் கிட்டத்தட்ட 6000 பேர் பக் கத்திலுள்ள தங்கள் வீடுகளுக்குப் போய் பகலில் சமைத்துவிட்டு இரவில் முகாமுக்கு ஓடி வந்து விடுவார்கள்." என்றார். "52,000 பேர், 18 ஏக்கர்" சிந்தித்துப் பார்த் தேன். ஒரு மாட்டுப் பட்டிதான் நினைவுக்கு வந்தது. ■

தொடரும்...

www.tamilarangam.net



# ஸ்ரீ லங்கா

## அதிகாரப் பலப்பரீட்சை



ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் சமாதான முகமூடி மேலும் மேலும் கிழிபட்டு வருகின்றது அதன் ஜனநாயகப் போர்வை அவிழ்ந்து அம்மணமாய் நிற்கின்றது. ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியினுள்ளே இருந்து கிளம்பிய கிளர்ச்சிக்காரர் கள், பிரேமதாசா அரசாங்கத்தின் மீது பாரிய குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி உள்ளனர். அக்குற்றச்சாட்டுக்களில் பெரும்பாலானவற்றில் உண்மைகள் இருக்கவே செய்கின் றன. இக்குற்றச்சாட்டுக்களில் பெரும்பகுதி இடத்தைப் பிடிப்பது, ஜனாதிபதி பிரேமதாசா சர்வாதிகாரியாக நடந்து கொண்டார் என் பதுதான். நாடாளுமன்றத்தையும், அமைச்சரவையையும் புறக்கணித்து தன்னிச்சையாகச் செயற்பட்டது ஜனநாயக விரோத நடவடிக்கை மாத்திரமல்ல அரசியல் யாப்புக்கும் முரணான செயலாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மேலும், ஆயிரக்கணக்கான கொலைகளுக்குக் காரணமாக இருந்தார் எனவும் உறவினர்களுக்கு சலுகைகள் செய்தார் எனவும் ஊழல்மோசடி செய்தார் எனவும் புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார் எனவும் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. இக்குற்றச்சாட்டுக்களின் பேரில் ஜனாதிபதி பிரேமதாசா பதவி விலக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான மனு ஒன்றையும் ஐக்கிய தேசியக் கட்சிக் கிளர்ச்சிக்காரர்களும், எதிர்க்கட்சியினரும் கூட்டாக, சபாநாயகர் மொகமட்டிடம் கையளித்திருந்தனர். இக்குற்றச் சாட்டுக்களை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுக்காமல் செய்வதிலும், அப்பிரேரணை 2/3 பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களால் வாக்களிக்கப்பட்டு உயர் நீதி மன்றத்தில் இறுதித் தீர்ப்பிற்கு விடப்படுவதைத் தடுப்பதிலும் பிரேமதாசா வெற்றி கண்டுள்ளார். அவ்வெற்றியை அவருக்கே உரிய சண்டித்தனப் பாணியில் செய்து முடித்துள்ளார். இத்தனிப்பாணியே அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களுக்கும் அடி ஆதாரமாகும். ஜனாதிபதியை பதவி விலக்குவதற்காக சபாநாயகர் மொகமட்டிடம் கிளர்ச்சிக்காரர்கள் கொடுத்த மனுவில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 47 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்து இட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டது. பலர் மிரட்டல் மூலம் பணியவைக்கப்பட்டனர். இன்னும் சிலர் பணமுதலைகளால் பேரம் பேசப்பட்டு வாங்கப்பட்டனர். இறுதியில் சபாநாயகரும் குத்துக்கரணம் அடிக்க வைக்கப்பட்டார். 116 ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவாக கையெழுத்திட்டு சபாநாயகரை இருமுறை எழுத்துமூலம் கேட்டுக் கொண்டனர். இதன் பேரில் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டிருந்த மனு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவேயில்லை. ஜனாதிபதியை பதவி அகற்றும் பிரேரனை வாக்கெடுப்பதற்கு விடப்படுவதாயின் அது இரகசிய வாக்கெடுப்பாக இருக்க வேண்டும் என்று எதிர்த்தரப்பினர் வலியுறுத்தியது இங்கு குறிப்பிடத்தக்கது. இரகசிய வாக்கெடுப்பாயின் உயிருக்கு ஆபத்து என்ற அச்சமின்றி பல ஐக்கிய தேசியக் கட்சியினர் பிரேமதாசாவிற்கு எதிராக வாக்களிக்க முன் வருவர் என்று எதிர்பார்க்கப்பட்டது.



சிறிமாவோ பண்டாரநாயக்கா

பிரேமதாசா மீதான பதவி விலக்கப் பிரேரணை பிசுபிசுத்ததைத் தொடர்ந்து, பிரேமதாசா அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர எதிர்ப்பாளர்கள் முனைந்தனர். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் பிரேமதாசாவின் அரசாங்கத்தை கவிழச் செய்ததன் பின்னர், பிரேமதாசாவிற்கு எதிரான புதிய அரசாங்கத்தை வைத்துக் கொண்டு ஜனாதிபதியை அகற்றவும், ஜனாதிபதி ஆட்சி முறையில் மாற்றங்களைக் கொண்டு வரவும் எதிர்த்தரப்பினர் கருதிச் செயற்பட்டனர். பிரேமதாசா எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை அல்லது அனுரா பண்டாரநாயக்காவை பிரதமராக்கப் போவதாக ஆசை காட்டி நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலை வைக்கப்போவதாக மிரட்டினார். நம்பிக்கையில்லா பிரேரணைக்கு போதிய வாக்குக்கள் கிடைக்குமா என்ற சந்தேகத்தில் எதிர்த்தரப்பினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்னெடுப்பதை விடுத்து, நடுநிலை பிறழ்ந்ததாக சபாநாயக்கர் மீது நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்தனர். அதுவும் தோற்கடிக்கப்பட்டது. அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில்

www.tamilarangam.net



விவாதத்திற்கு எடுக்கப்படலாம் என்ற நிலையில் யாழ் மாவட்ட சுயேட்சை நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரவேசம் இடம் பெற்றது. முன்னைய ஈரோஸ் அமைப்பின் தலைவர்களில் ஒருவரான சங்கர்ராஜி தனது ஆட்களை நாடாளுமன்றப் பதவிகளில் இருத்தி அரசாங்கத்திற்கு முண்டு கொடுக்க பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டார். இதற்காக அரசியல் சட்டத்தை மாற்றுவது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. இத்தருணத்தில் யாழ் குடா நாட்டின் நாடாளுமன்ற பிரதிநிதிகளாக 6 பேர் அக்குழுவின் தலைவரான எட்வேட் செபஸ்தியாம் பிள்ளையின் பரிந்துரையின் பேரில் நியமிக்கப்பட்டனர். முன்னைய ஈரோஸ் தலைவர்களான பாலகுமார், பரா ஆகியோர் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுவதும், விடுதலைப் புலிகளின் ஆசியின் பேரிலேயே சுயேட்சைக் குழுவினர் கொழும்பு வந்திருக்க முடியும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. விடுதலைப் புலிகளின் யுக்திரீதியான நடவடிக்கை ஆகவே இதனை நாம் கருத வேண்டியுள்ளது. ஸ்ரீலங்கா அரசாங்கம் நெருக்கடிக்குள்ளாகி இருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்தைப் போராட்டத்திற்குப் பயன்படுத்தும் நிலையை இங்கு அவதானிக்கக் கூடியதாக உள்ளது. சிங்கள இனவாதம் இரண்டாகப் பிரிந்து சண்டையிடும் இவ்வேளையில், நாடாளுமன்றத்தில் மூன்றாவது சக்தியாக செயற்பட்டு, தமிழீழ மக்களின் நலனை முன்னெடுக்கும் விதத்தில் சுயேட்சைக் குழு வழி நடத்தப்படுவதாகவே கருதலாம்.

இத்தருணத்தில் சிங்கள இனவாத சக்திகளின் தன்மைகளையும் இங்கு நாம் விளங்கிக் கொள்ளல் வேண்டும். இது அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான பலப்பரீட்சை என்பது தெளிவானது. மேல்தட்டு வர்க்க, பிரபுத்துவ பிரிவினருக்கும், சண்டித்தன முதலாளிப் பிரிவினருக்கும் இடையிலான மோதலாகவே காணப்படுகின்றது. கொழும்பிலுள்ள மேல்தட்டு வர்க்க இடமான குருந்துவத்த, சண்டித்தனப் பகுதியான கெசல்வத்த ஆகியவற்றிற்கிடையிலான மோதல் என்று வர்ணிக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துலத்முதலி கோஷ்டியினர் குருந்துவத்தையை பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, பிரேமதாசா கெசலவத்தையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். அத்துலத் முதலி கோஷ்டியினருக்கு இந்தியாவின் ஆதரவு இருப்பதாக நம்பப்படுகின்றது. புலிகளை அடக்குவதற்கு இந்தியாவின் ஆதரவு அவசியமென்று உறுதியாக நம்பும் இக்கோஷ்டியினர், தேவையெனில், இந்தியப் படைகளை மீண்டும் வரவழைக்கும் சாத்தியக் கூறுகளும் உண்டு. இராணுவ நிலைமைகளை கருத்தில் எடுக்காது, பிரேமதாசா இந்திய இராணுவத்தை வெளியேற்றியதாகவும், இதனால் சிங்கள இராணுவத்தினர் பாதிப்புக்குள்ளானதாகவும் பிரேமதாசா மீது குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதில் தீவிரமாக செயற்பட்ட, இந்திய ஆதிக்கத்திற்கு அடிபணிய மறுக்கும் பிரேமதாசாவைத் தண்டிக்க இந்தியா எண்ணியிருக்கலாம்.



லலித் அதுலத் முதலி

மீண்டும் தனது படைகளை அனுப்ப முடியாது போயினும் கிளர்ச்சிக்காரரின் புதிய அரசு, இந்திய வல்லாதிக்க நலன்களுக்கு விட்டுக் கொடுக்கும் என்றும், அதன் மூலம் கூடுதலான கூட்டுறவு ஏற்படும் என்றும் அதன் அடிப்படையில், விடுதலைப் புலிகளையும், அதன் தலைவரையும் தண்டிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கலாம் என்றும் இந்திய வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்கள் எண்ணியிருக்கலாம். மேலும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த அதனை வகுப்பதில் முக்கிய காரணகர்தராக இருந்த காமினி திசாநாயக்காவை மீண்டும் பதவியில் அமர்த்தவும் கருதியிருக்கலாம். இச்சூழ்நிலையை கூர்மையாக அவதானிப்பதும், பாதகமான மாற்று கருத்துக்கள் தெரிவிக்கப்படும் போது அதனைத் தடுத்து கருத்துக் கூறுவதும், மேலும் உள்ளே நுழைந்து, ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தை போராட்ட முன்னெடுப்பிற்கு வரையறையானமுறையில் பயன்படுத்துவதுமே விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தின் தற்போதைய தந்திரோபாயமாக இருத்தல் வேண்டும். தமிழீழ தலைவர் பிரபாகரன் அண்மையில் பீ.பீ.சீ கொழும்பு நிருபருக்கு அளித்த பேட்டியில் இத்தகைய நிலையையே பிரதிபலித்தார். இந்திய உளவுத்துறையினரான RAW வினால் உருவாக்கப்பட்ட கூலிப்படையான தமிழ்த் தேசிய இராணுவத்தின் ஆயுதங்களைக் களையும் விடயத்தில், ஸ்ரீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்டதாகவும், அதற்காக ஆயுதங்கள் பகிரப்பட்டதாகவும், பிரேமதாசா நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தெரிவித்த போது அதனை விடுதலைப் புலிகள் மறுத்து அறிக்கை வெளியிட்டனர். அதற்கு ஆதாரவாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் 1989 அம் ஆண்டின் இறுதியில் ஸ்ரீலங்கா தொலைக்காட்சி ரூபவாகினிக்கு அளித்த பேட்டியையும் மறுபிரசுரம் செய்தனர். தமிழ்த் தேசிய இராணுவத்திற்கு எதிரான நடவடிக்கை ஒரு உள்நாட்டுப் பிரச்சனை என்றும் அதனை விடுதலைப் புலிகளே தீர்மானித்து நடத்தியதாகவும்,

www.tamilarangam.net



அவ்விடயம் குறித்து அரசாங்கத்தோடு எவ்வித உடன்பாடோ, கூட்டுறவோ இருந்ததில்லை என்றும், அப்போது அரச படைகள் தலையிட்டிருந்தால் கொழும்பில் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடந்திருக்காது என்றும் விடுதலைப் புலிகள் அரச படைகளோடு மோத வேண்டி வந்திருக்கும் என்றும், அப்பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். இதே காலத்தில் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் சிங்கள மக்களுக்கு ஒரு பகிரங்கக் கடிதம் ஒன்றை அறிக்கையாக வெளியிட்டது. இனவாத பாசிச அரசாங்கத்தை தூக்கி எறிய சிங்கள மக்களும், தமிழ் மக்களும் ஒருங்கிணைய வேண்டும் என இவ்வறிக்கை அறைகூவியது.



காமினி திஸ்ஸநாயக்க

ஸ்ரீலங்கா அரசின் சதிகாரக் குடியேற்றத்திட்டங்களில் பகடை காய்களாக சிங்கள மக்கள் பயன்படுத்தப்படக் கூடாது என எச்சரித்ததோடு சுதந்திரமான சிங்களத் தமிழ்த் தேசங்கள் சுயமான விருப்பத்தின் அடிப்படையிலும் பயனுள்ள வகையிலும் கூட்டுறவுடன் செயற்பட முன்வருமாறும் அவ்வறிக்கை பிரகடனம் செய்தது. தமிழினம் அண்மைக் காலத்தில் சந்தித்து வரும் பயங்கர அழிவுகளுக்கும், இனக் கொலைகளுக்கும், கொடூரங்களுக்கும் பிரேமதாசாவே காரணம் என்ற அடிப்படையில் அது அகற்றப்பட வேண்டும் என்ற ரீதியில் அவ்வறிக்கை அமைவதாக உள்ளது.



அநுரா பண்டாரநாயக

அண்மையில் தென்பகுதியில் எழுந்துள்ள முரண்பாட்டில் இரு பகுதியினரும் இனவாதத்தில் சளைத்தவர்கள் இல்லை என்பதை நிரூபித்து வருகின்றமையால் மீண்டும் இனவாதம் நெருப்பாக கக்கப்பட்டு வருகின்றது. சிங்கள மக்களிடையே யார் கூடுதலான இனவாதிகள் என்பதை நிரூபிக்க எடுக்கும் முயற்சியில் சிங்கள தமிழ் பகை நிரந்தரமாக்கப்பட்டு நிரப்ப முடியாத பிளவாக மாறிவருகின்றது. உள் அதிகாரப் போட்டியில் சிங்கள மக்களின் ஆதரவைத் திரட்டுவதற்காக வழமை போல் தமிழர்களின் தலை உருட்டப்படுகின்றது. கலவர நிலையும் தூண்டப்படுகின்றது. வடகிழக்கில் பிரபாகரனும், தெற்கில் பிரேமதாசாவின் செயலாளரான பாஸ்கரலிங்கமும் ஆள்கின்றார்கள் என்ற சுலோகங்களும் காமினி திசாநாயக்காவினால் வைக்கப்பட்டுள்ளது. பௌத்த பிக்குகளும் போர்க்கொடி தூக்கியுள்ளனர். அமைச்சர் தொண்டமான் புலிகள் தலைவர் பிரபாகரனைச் சந்திப்பதானால் அவர் தமது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. சிங்கள இராணுவத்தின் உயிரிழப்பு, தமிழ் குரோதத்திற்கு தூபமிட அத்துலத் முதலி போன்றோரால் பயன்படுத்தப் படுகின்றது. இந்த நிலையில் இரண்டு பைசாசங்களுக்கு இடையில், எவரோடு தமிழீழ விடுதலைப் புலிகள் இணைவது என்ற கருத்துக்கே இடமில்லை. இந்தப் பைசாசங்களிடமிருந்து தமிழீழ மண்ணையும், மக்களையும் எவ்வாறு பாதுகாப்பது என்பதே அவர்கள் முன்னுள்ள கேள்வியாகும். ■

**உங்கள் கவனத்திற்கு...**

**கருத்தோட்டமுள்ள, ஆரோக்கியமான கதைகள், கட்டுரைகள், கவிதைகள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.**

**உங்கள் ஆக்கங்கள் ஆசிரியர் குழுவின் ஆய்விற்கு உட்படுத்தப்படும்.**

**"எரிமலை" இதழ் தொடர்பான உங்களது ஆக்கபூர்வமான விமர்சனங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

*** உங்கள் பத்திரிகையை நெறிப்படுத்த வேண்டிய கடமை உங்களதே ***

www.tamilarangam.net



# நிழலல்ல நிஜம்

– ரோசி

"மண்ணில் இந்தக் காதல் இன்றி யாரும் வாழ்தல் கூடுமோ...
எண்ணம் தன்னில் பாவையின்றி ஏழு ஸ்வரம்தான் பாடுமோ......? "

படு அட்டகாசமாக, ஒரு பொடியன் தம்பிடிச்சு பாடிக்கொண்டிருந்தான். அண்மைக்காலத்தில பாலசுப்பிரமணியம் பாடின பாட்டுக்களில பரபரப்பை ஏற்படுத்தின பாட்டு; "லம்பாடா" பாட்டு மாதிரி. எல்லாச் சிறுசுகளையும், ஏன் வயதான ஆக்களையும் அனுங்க வைச்சபாட்டுத் தானே. நுரையீரலைத் தொல்லை பண்ணி பாலா பாடினார் எண்டு சொல்லுகினம். உலக சாதனைப் புத்தகத்தில பதியக்கூடும் எண்டும் கதைக்கினம்.

எப்பிடியண்டாலும், கஷ்டப்பட்டு ஒரு காரியத்தைச் செய்யேக்க சனங்களின்ர வரவேற்பு இருக்குத் தானே. அதுக்காக கஷ்டப்பட்டுச் செய்யிற எல்லாக் காரியத்தையும் சனங்கள் வரவேற்கும் எண்டு சொல்லேலாது.

பாரிசில நடந்த இந்த நிகழ்ச்சியில, இந்தப் பொடியனும் ஏறிநிண்டுகொண்டு, தானும் பாட்டுக்காரன் எண்ட பிளானில உந்தப் பாட்டப் பாடேக்க வருத்தமாத்தான் இருந்துது; ரொம்பவும் கஷ்டப்பட்டுப்போட்டான்.

அவ்வளத்தையும் என்னண்டு மூச்சுவிடாமல் பாடுறது? முயற்சி செய்யத்தான் வேணும், அதுகளை பாராட்டத் தான் வேணும்; அதுக்காக... இப்பிடி உசிர் போறமாதிரி... தம்பிடிச்சு, இருந்து, குனிஞ்சு, நிமிந்து, வளைஞ்சு....

உண்மையில பார்க்கக் கஷ்டமாத்தான் இருந்துது. வயித்துவலி கண்டமாதிரி..... பொடியன் பட்டபாடு... அப்பாடா. மலேரியாக் காச்சல் வந்தாக்களுக்கு, காலக் கையை உதறி எறிஞ்சு, தலையைக் கொண்டே செருகிறத பாத்திருக்கிறியளே. பாக்கேக்க எவ்வளவு வேதனையா இருக்கும். அவற்றை வருத்தத்தை போக்காட்ட எங்களால முடியாதெண்ட இயலாமையால, எங்களுக்கு சங்கடமா இருக்கிறதில்லையா? அந்த மாதிரி சங்கடமாக் கிடந்துது.

இதில இன்னொன்டையும் நாங்கள் பாக்கவேணும். ஆழிக்குமரன் ஆனந்தன் "ருவிஸ்ற்" நடனம் ஆடி உலக சாதனை செய்துபோட்டார் எண்ட வேகத்தில, யாழ்ப்பாணத்தில மூலமுடுக்கெல்லாம், பனங்குத்தியள நட்டு மேடை போட்டு, குஞ்சங்கள் கட்டி, லாஸ்பீக்கர் போட்டு ஊரைக் கூட்டி, ஆளுக்கொரு பக்கத்தால எங்கட ஆக்கள் ஆடேல்லயே? "ஆடல்" எண்டதுக்கு ஏதும் விதி இருந்தா, அத எப்பனும் கவனிக்காம, உடம்பை எப்பன் அசைச்சுக்கொண்டு நாளைப் போக்காட்டின மாதிரி...

இதில இருந்த அசிங்கமான பிரச்சனை என்னண்டா...
பொடியனின்ர முயற்சி எண்டுறது சரி; மூச்சுவிடேல்ல எண்டது உண்மை. நுரையீரல் கஷ்டப்பட்டுப்போட்டு தெண்டது அவரின்ர அபிநயங்களில புரிஞ்சுபோச்சுது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனால், சுதி கிதி, தாளம் மேளம், அது இது எண்டு, ஒரு பாட்டுக்கு என்னென்ன தேவையோ அதையெல்லாம் அள்ளி விழுங்கி அப்பிடியே கையோட ஏவறையும் விட்டிட்டார்.
ஒத்திசைக்கின்ற எல்லா வாத்தியங்களும் ஒழுங்காத்தான் வாசிச்சவை; ஆனால் பாடகர்தான் பாட்ட நீட்டி உயர்த்தி, கடைசியில இழுத்து எங்கையோ கொண்டுபோய்ச் சொருகி. . . .

அவரின்ர பிரச்சனை என்னண்டா, பாலசுப்பிரமணியம் மாதிரி மூச்சு விடாமல் பாடவேணும்; அவ்வளவுதான். சுற்றிவர இருக்கிற ஆக்களைப் பற்றி அவருக்கு அக்கறையில்ல. தன்னை விளம்பரப்படுத்த அவர் எடுத்த முயற்சியால, சனங்களையும், சக கலைஞர்களையும் ரொம்பவும் கலவரப்படுத்திப் போட்டார். சனங்களுக்கு சலிப்பு எண்டாலும், ஒரு சம்பிரதாயத்துக்கு கையத் தட்டி ஆரவாரப்படுத்திச்சினம்; அடுத்த மேடையிலும் இதேபோல " றை " பண்ணும் எண்ட மாதிரி.

இதில வேடிக்கை என்னண்டா ? . . . சொன்னா விழுந்து விழுந்து சிரிப்பியள்.
பாலசுப்பிரமணியமே சொல்லிப் போட்டார் உந்தப்பாட்டை தான் மூச்சு விட்டுத்தான் பாடினதாம். மூச்சுவிடாதமாதிரி. . . . பக்குவமா பேய்க்காட்ட ஏதோ " றிக்ஸ் " இருக்காம்.
எப்பிடி விளையாட்டு. . .

அந்தப் பெரிய அனுபவசாலியே மூச்சுவிட்டுப் பாடின பாட்டை, இவங்களேன் மூச்சுவிடாமல் பாட " றை " பண்ணுறாங்கள். மோட்டுத்தனமா முயற்சி எடுக்கிறாங்கள். சரி சரி. . . முக்கிக்கொண்டு திரியாமல் லேசா மூச்சுவிடுங்கோ காரியமில்லை.

எங்கட கலைஞர்களில பெரிய பலவீனங்கள் மண்டிக்கிடக்கு; மற்றாக்கள் செய்யிறதை அப்பிடியே கொப்பியடிக்கிறது. திறமையான தென்னிந்தியக் கலைஞர்களைப் பாராட்டுவம்; அது வளர்க்கப்பட வேண்டிய நல்ல பண்பு. அதுக்காக, தென்னிந்தியக் கலைகளின்ர விம்பமா எங்கட கலையள் இருக்கவேணும் எண்டு நினைக்கிறதே? அப்பிடியெண்டால் எங்களில எங்களுக்கு நம்பிக்கை இல்லை.

பாட்டுக்களில, இடையில வாற இருமல், சிணுங்கல் சத்தங்களைக்கூட அச்சொட்டா வெளிப்படுத்திறதில எங்கட ஆக்களை அடிக்கேலாது. ஒரிஜினல் பாட்டுக்காரரே திரும்ப அப்பிடியே பாடக் கஷ்டப்படுவினம். தண்ணியைக் கொதிக்கவைச்சு, கைக்கணக்குக்கு உப்பைத் தூவி, "ரெடிமெட்" ஆக் கிடைக்கிற இடியப்பத்தை சுடுதண்ணிக்க போட்டு, பதம்பாத்து இறக்கிற மாதிரி; உதிலயும் உங்கட திறமையில விசயம் இல்லை.

உலகத்தில உள்வாங்க வேண்டிய, வெளிப்படுத்தவேண்டிய எத்தினையோ விசயங்கள் நிறைஞ்சிருக்கு, அதில ஈடுபடுங்கோவன்; நீங்களும் காலத்தால நிலைச்சிருப்பியள். உங்களால உங்கட நாட்டுக்கு எத்தினையோ செய்யக்கிடக்கு; அதச் செய்யுங்கோவன்; எங்கட சனங்கள் உங்களப் போற்றுங்கள். எங்கட அம்மா பசியிலயும், துன்பத்திலயும் வாடிவதங்கேக்க, பக்கத்து வீட்டுச் சீமாட்டிக்கு கொசுவம் சொருகி விடுறதே எங்கட வேலை?

எப்பனெண்டாலும் மூளையைப் பாவிப்பம், இதயத்தைக் கசக்குவம், எங்கள யோசிப்பம்; காத்திரமான நல்ல விசயங்கள் அதுக்குள்ளால வெளிப்படுகுதோ இல்லையோ எண்டு பாருங்கோ. . . . கட்டாயம் வெளிப்படும்.

அப்பிடி ஏதும் நல்ல விசயங்கள் வெளிப்படாமல், சிந்தனை இருட்டா இருந்தா, உதுகள தொப்பெண்டு போட்டுட்டு வேற றூட்டில போறதுதான் உங்களுக்கும் நல்லது; நாட்டுக்கும் புண்ணியம்.

இன்னொண்டையும் கையோட சொல்லிப்போடவேணும்.
உங்கட வீட்டுக்கு மேல குண்டுவிழுந்து வீடெரிஞ்சு கொண்டிருக்கேக்க, "நிலாக் காயுது, நேரம் நல்ல நேரம்" எண்டு நீங்களே "ஸ்ரைலா" நிண்டு பாடிக்கொண்டிருந்தா எப்பிடியிருக்கும். ■

[redacted]

www.tamilarangam.net



## பத்திரிகைகளில், சஞ்சிகைகளில்

# புலி எதிர்ப்பு வாதம்

## பின்னணி என்ன ?

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் மத்தியில் பல சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் வெளியாகிக் கொண்டிருப்பதனை இன்று நாம் காண முடிகின்றது.

ஆரம்ப நாட்களில், கையெழுத்திலும், தட்டச்சிலும் வெளியாகிக் கொண்டிருந்த இப்பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் இன்று கம்யூட்டர் முறையினைப் பயன்படுத்தி, அழகாகவும், கவர்ச்சிகரமாகவும் அச்சிடப்படுகின்றன. கம்யூட்டரில் தமிழ் எழுத்துக்களை எழுதக்கூடிய இன்றைய சூழலால், புதிதாகவும் பல பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வெளிவரத் தொடங்கியுள்ளன.

எம் தேசத்திலிருந்து தொலைத்து, தொலைதூரம் வந்துவிட்ட புலம் பெயர்ந்த தமிழர் சமுதாயத்தின் மத்தியில் பத்திரிகைகள் சஞ்சிகைகள் வெளிவருவது நல்ல விடயம்தான்.

ஆனால், இவ்வாறு வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் சில, புலி எதிர்ப்பு வாதத்தினையே தமது கொள்கையாகக் கொண்டிருப்பதனை மிகுந்த வேதனையுடன் அவதானிக்க முடிகின்றது. தமிழ்த் தேசிய இனத்தின் பிரதான எதிரி விடுதலைப் புலிகளே என்ற தோரணையில் இவர்கள் தமது வெளியீடுகளை மேற்கொள்வதனையும் காணமுடிகிறது.

தமிழீழப் போராட்டம் உயர் வளர்ச்சி அடைந்திருக்கும் இன்றைய காலகட்டத்தில், பொதுமக்களும் யுத்த முனைக்குச் சென்று போராளிகளுக்கு உறுதுணையாக நின்று செயற்படும் அளவுக்கு போராட்டம் மக்கள் மயப்படுத்தப் பட்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில், தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தினைப் பூண்டோடு ஒழித்துவிட சிங்களப் பௌத்த மேலாதிக்கமும், அதற்குத் தலைமை தாங்கும் ஸ்ரீலங்கா இனவாத அரசும் முழு மூச்சுடன் செயற்படும் இன்றைய காலகட்டத்தில், நாட்டைவிட்டு புலம் பெயர்ந்திருக்கும் எம்மவர்களில் சிலரின், எதிரிக்குச் சாதகமான இன்றைய நடவடிக்கைகள் கண்டிக்கப்படவேண்டியதும், தவிர்க்கப்படவேண்டியவையுமாகும்.

இன்று எம்மில் பலர் மத்தியில் எழும் கேள்வி; இவர்கள் ஏன் இவ்வாறு நடந்து கொள்கின்றார்கள் என்பதே. இவர்களின் புலி எதிர்ப்பு வாதமே இதற்குக் காரணம் எனலாம்.

### புலி எதிர்ப்பு வாதம்

புலி எதிர்ப்பு வாதத்தில் மூழ்கி, தமது பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் புலி எதிர்ப்பு வாதத்தின் குரலாக வெளியிடுபவர்களில் பலர், போராட்டத்தின் ஒரு கட்டத்தில் வெவ்வேறு அமைப்புகளில் அங்கம் வகித்தவர்கள் என்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடவேண்டியது.

இவ்வாறு இவர்கள் புலி எதிர்ப்பு வாதத்தினுள் மூழ்கியமைக்கு அவர்கள் சார்ந்திருந்த அமைப்புக்களுக்குள் இவர்களுக்குப் போதிக்கப்பட்ட புலி எதிர்ப்புப் பிரச்சாரம் மிக முக்கியமான காரணமாகும்.

புலி எதிர்ப்பு வாதத்தினுள் மூள்கியுள்ளவர்களில் சிலர், தாம் புலி எதிர்ப்பு வாதத்தினுள் மூழ்கியுள்ளமையினை ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற நிலையினையும் காணமுடிகிறது. "புலி எதிர்ப்பு வாதம் பயனற்றது" என்ற வகையில் இவர்கள் கூறிக்கொள்கின்றபோதும், இவர்களின் எழுத்துக்கள், செய்திகள் வெளியிடும் விதம் போன்றவை, இவர்களின் புலி எதிர்ப்புத் தன்மையினைத் தெளிவாகவே வெளிப்படுத்துகின்றன.

வேறு அமைப்புக்களில் இருந்து வெளியேறியவர்கள், புலி எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது பொதுவான போக்கல்ல. வெவ்வேறு அமைப்புக்களில் இருந்து

www.tamilarangam.net



வெளியேறியவர்கள் பலர், தமது அமைப்புக்களின் தவறுகளை உணர்ந்து, இன்று விடுதலைப் புலிகளுடன் இணைந்து போராட்டத்தில் பங்கெடுத்து வருவதனையும் நாம் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

புலி எதிர்ப்பு வாதத்தினை முதன்மைப்படுத்தி பிரச்சாரம் செய்பவர்களின் பின்னணிகளை ஆராயும் போது, இவர்களின் செயற்பாடுகளுக்கு காரணங்களாக இரு விடயங்களை அவதானிக்க முடிகின்றது.

## அரசியற் குரோதம்

அரசியல் ரீதியாக துரோக நிலைப்பாட்டினைக் கொண்டவர்களும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினூடாக ஏற்படக்கூடிய சமூக மாற்றத்தினை ஜீரணிக்க முடியாதவர்களுமாக விடுதலைப் புலிகள் மீது வெறுப்புக் கொண்டவர்களாக இருக்கும் சிலர், விடுதலைப் புலிகள் அழிக்கப்படவேண்டும் என்ற நோக்கினைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். விடுதலைப் புலிகளை இராணுவ, அரசியல் ரீதியாக அழிக்க முடியாது என்பதனை இவர்கள் உணர்ந்திருந்தாலும், குறைந்தபட்சம் புலிகளை பலவீனப்படுத்தவாவது தமது பிரசாரங்கள் உதவும் என இவர்கள் நம்புகின்றனர்.

இதனால், "நடுநிலமை" "உண்மைத் தகவல்கள்" என்ற பெயரில், சிறீலங்கா அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான சக்திகளும், வெளியிடும் தகவல்களை இவர்கள் முதன்மைப்படுத்தி வெளியிடுகின்றனர்.

தமது பத்திரிகைகளும், சஞ்சிகைகளுக்கும் "பலம்" சேர்ப்பதற்கு வறட்டுச் சித்தாந்த வாதிகளையும் இவர்கள் தமது பக்கம் இழுத்துக் கொள்கின்றனர். பல்வேறு சித்தாந்தங்களை கவர்ச்சிகரமாக எழுத்தில் முன்வைத்து விடுகின்ற இவர்கள், தங்களை முற்போக்காளர்களாகவும், மனித உரிமை வாதிகளாகவும் வெளிப்படுத்திக் கொள்கின்றனர்.

தாம் சார்ந்திருந்த அமைப்புக்களின் துரோகத் தனங்களையும், கறைபடிந்த செயற்பாடுகளையும், மக்கள் மத்தியில் வெளிப்படுத்தி பாவமன்னிப்புத் தேடவேண்டிய இவர்கள், இன்று புனித உபதேசம் செய்கின்றனர்.

விடுதலைப் புலிகள் மீது, அரசியல் குரோதம் கொண்டுள்ள இவர்கள், அரசியல் ரீதியாக தம்மை வெளிப்படுத்திச் செயற்பட முடியாத அளவுக்கு அரசியல் வங்குரோத்துத் தனத்தில் மூழ்கியிருப்பதினாலும், மக்கள் முன் அம்பலப்பட்டுள்ளமையாலும் தம்மை "நடுநிலைப் பத்திரிகையாளர்களாகவும்" இலக்கியவாதிகளாகவும் வெளிப்படுத்திக் கொள்கின்றனர்.

என்ன முகத்துடன் வந்தபோதும் இவர்களது நோக்கம் ஒன்றேதான். அதாவது புலிகள் அழிக்கப்பட வேண்டும், அல்லது பலவீனப்படவேண்டும் என்பதே இவர்களது நோக்கம்.

புலிகளைப் பலவீனப்படுத்துவதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை செயலிழக்கச் செய்யலாம் என்பதே இவர்களின் எதிர்பார்ப்பு. இத்தகையவர்கள் குறித்து புலம் பெயர்ந்து வாழும் மக்கள் விழிப்போடிருக்கவேண்டும்.

## அரசியற் தெளிவின்மை

இன்று புலி எதிர்ப்பு வாதத்தில், மூழ்கிச் செயற்படும் இவர்களில் சிலர் சரியான அரசியல் தெளிவு இல்லாமையினாலே இவ்வாறு செயற்படுகின்றார்கள் என்று கருத இடமுண்டு.

தாம் சார்ந்திரந்த அமைப்புக்களின் துரோகத் தனங்களை நன்கு விளங்கிக் கொண்டுள்ள இவர்கள், முன்பு ஊட்டப்பட்ட, ஊறி நின்ற புலி எதிர்ப்பு வாதத்திலிருந்து விடுபடமுடியாதவர்களாக இருக்கின்றனர்.

இன்றைய கால கட்டத்தில் விடுதலைப் புலிகளை பிரதான எதிரியாகக் கருதி எதிர்ப்பது தமிழ்தேசிய இனத்தின் அழிவுக்கே இட்டுச் செல்லும் என்பதனை இவர்கள் புரிந்து கொள்ளாமல் இருப்பது வேதனைக்குரிய விடயமே.

இதனை இவர்கள் புரிந்து கொள்ள முடியாமல் இருப்பதற்கு காரணம் இவர்களிடம் காணப்படுகின்ற புலி எதிர்ப்பு வாதம் என்றே கூறவேண்டும். தமிழ் மக்களின் வாழ்வும், விடுதலைப் புலிகளின் இருப்பும் இன்று பின்னிப் பிணைந்ததே என்பது ஒரு சிறு பிள்ளையால் கூட விளங்கிக் கொள்ளக் கூடிய விடயமாகும்.

விடுதலைப் புலிகளையும், தமிழ் மக்களையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாத அளவுக்கு எமது இன்றைய வாழ்வுநிலை அமைந்துள்ளது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள் இருக்கும் பகுதிகளிலேயே தமிழ் மக்கள் இராணுவத்தின் மனித வேட்டையில் இருந்த தப்பி பாதுகாப்பாக வாழ முடிகின்றது. சிறீலங்கா இராணுவம் உள் நுழைந்த பகுதிகளுக்குள் இராணுவத்தால் நடத்தப் படுகின்ற தமிழின அழிப்பு சர்வதேசம் அறிந்த நிகழ்வாகும்.

விடுதலைப் புலிகள் மீது, விமர்சனங்களை வைப்பது வேறு, விடுதலைப் புலிகள் செய்வதெல்லாம் தவறு என்ற கண்ணோட்டத்தில் செயற்படுவது வேறு. நாம் எமது மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்வோமாக இருந்தால், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உறுதியுடன் முன்னெடுத்துச் செல்கின்ற போராட்ட சக்தி விடுதலைப் புலிகளே என்ற உண்மையினை ஏற்றுக் கொள்வோம். எனவே வெறுமனே புலி எதிர்ப்பு வாதத்தினுள் மூழ்கி, புலிகள் செய்வதெல்லாம் தவறு என்ற வியாக்கியானங்களை வெளியிடுவதைத் தவிர்த்து, ஆரோக்கியமான

www.tamilarangam.net



முறையில் இவர்கள் சிந்திக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் துரோகம் புரிந்தவர்களாக வரலாற்றில் இடம் பெறுவதனை தவிர்த்து ஆக்கபூர்வமான முறையில் இவர்கள் செயற்பட வேண்டும் என விரும்புகின்றோம். ■

# அலுகோசு

ஒரு கயிறு
ஒரு சுத்தியல்,
ஒரு இரும்புக்கம்பி
தாருங்கள் எனக்கு;
ஒரு தூக்குமரத்தை நான் ஆக்குவதற்காக.

எங்கள் மத்தியில்,
இன்னும் ஓர் கும்பல்
எஞ்சியுள்ளது.
அவமானத்தை அது சாப்பிடுகின்றது.
தலைகுனிந்து நடந்து செல்கின்றது.
அவர்களின் பிடரியை நிமிர்த்துவோம் நாங்கள்.

எதிர்ப்படும் ஒவ்வொரு கையையும்
நக்கும் ஒருவனை
எப்படி நாங்கள் எம்மிடை வைக்கலாம்.

*- பலஸ்தீனக் கவிதையின் தமிழாக்கம் -*



www.tamilarangam.net



# தியாக மலர்களே !

உங்கள்
பூத்துக் குலுங்கிய
புன்னகையை - அவர்கள்
வெட்டி எறிந்தனர்.

உங்கள்
பசுமையான நினைவுகள்
பக்குவப்படுத்திய நெஞ்சங்களை
தோட்டாக்களைக் கொண்டு - அவர்கள்
சின்னாபின்னப்படுத்தினர்.

இதயத்தில்
கவிதைகள்
தோன்றாத நாளில்
வார்த்தை - அழகு
குடியேறிய - முதல்
புதுக்கவிதைகள் நீங்கள்!

கல்லறைக்குள்ளிருந்தும்
மக்கள் நினைவுகளாய் வாழும்
தியாக மலர்களே!

விடியல் எட்டாத நாளில்
கிட்டிய பொக்கிஷங்களே!

உங்கள்
செம்மைமிகு செங்குருதி
எங்கள் தேசத்தை
சிவப்பேற்றும்.

உங்கள்
உணர்வுகளின்
இதயத்துடிப்பு
உரிமைகள் கொண்ட
புதிய விடியலொன்றை
பெற்றெடுக்கும்.

ஓ....!
உயிரினை விலையாக்கி
விடுதலை விதை தூவிய
எனது தோழர்களே!
உங்கள் இரத்தங்கள்
நீர்பாச்சி வந்தவிதை
தொடர்ந்து வளரும்.
வளர வேண்டும்.
வாழ்க தமிழ்!
வளர்க தமிழீழம்!

**ப. காண்டீபன் - போர்ன்**
**சுவிஸ்**

www.tamilarangam.net



சிறுகதை
தமிழீழத்திலிருந்து

# புரிதல்

சிதம்பர திருச்செந்திநாதன்

**வா**னம் சுதந்திரமாக இருந்தது.

வெளிர் நீல நிறத்தில் அதன் அழகு பிரமிப்பைத் தந்தது. எப்படி இருந்தும் என்ன பிரயோசனம்?

வானம் மாத்திரம் சுதந்திரமாகவும், அழகாகவும் இருந்தால் மட்டும் போதுமா என்ற நினைப்பும் அவனுள் எழுந்தது.

தலைக்குமேலே மாமரத்தின் கிளைகளில் பசுமை பிரகாசித்தது. ஒன்றையொன்று கலைத்து வந்த இரண்டு அணில்கள் ஒரு செக்கன் நின்று அவனை விநோதமாகப் பார்த்துவிட்டு மீண்டும் பாய்ந்தன.

நல்ல காலம், சுலோசனா காணவில்லை, என அவன் நினைத்தான். அவள் கண்டிருந்தால்.

"பார்த்தீங்களா! இந்த அணில்களும் உங்கடையாட்கள் மாதிரி என்னை விநோதமாய்ப் பார்க்குதுகள்" என்றுதான் சொல்லுவாள்.

அவள் சுபாவமே இப்படித்தான். எதையும் சமாளித்து அனுசரித்துப் போகும் பழக்கம் எவருக்கும் மிகவும் கஷ்டமான காரியம்.

மனம் மீண்டும் இயற்கையுடன் ஒன்றிப் போயிற்று. பெரிய வளவில் நெருக்கமான மரங்கள், மா, பலா அத்தனையும் இருந்தன. ஒரு புறத்தில் வாழையும் கூட. வேண்டாம், வேண்டாம் என்று பூஞ்செடிகளும் தான்.

தண்ணீர் இல்லாமல் எல்லாமே சோர்ந்து போய், அகதிகளாய் இருக்கும் நம்மவர் போல இருந்தன.

பார்வை அப்பால் வளைந்து போயிற்று. மதிலைத் தாண்டி தூரத்தில் தெரிந்த பனைமரங்களைக் கண்கள் கவ்விக் கொண்டன.


எங்கள் வாழ்க்கையின் குறியீடாகத்தான் இந்த மண்ணின் பனை இருக்கிறது என அவன் நினைத்தான். என்ன கஷ்டம் வந்தாலும் தோற்றத்தில் என்ன தளர்ச்சி வந்துவிடப்போகிறது?

பொருளாதாரத்தடை வந்து மண்ணெண்ணையைக் காண்பதே கஷ்டமாகி நீர் இறைப்புக்களும் கனவாகி பசுமையான பயிர்கள் எல்லாம் காய்ச்சல்காரர்கள் மாதிரி ஆனபின்னரும் கூட பனை மரங்கள் என்ன மாதிரி உறுதியாய் நிற்கின்றன.

பனைகளைப் பார்க்க அவனிற்கு பெருமிதமும் சந்தோசமாகவும் இருந்தது. ஆனால் எத்தனை பேர் இதனை உணர்ந்து கொள்கிறார்கள்.

வேலைக்குப் போகும் நேரங்களைத் தவிர சாய்மனைக் கதிரையைக் கொண்டு வந்து இந்த மாமரத்தின் கீழ் போட்டு அவன் இயற்கையோடு ஒன்றி விடுவது வழக்கமாகி விட்டது.

வீட்டினுள் இருப்பது அவனுக்கு சங்கடமான விடயம். என்னதான் இருந்தாலும் இருப்பது அந்நிய வீடு. எதைச்செய்வதாக இருந்தாலும் கேட்டுத்தான் செய்யவேண்டும். வீட்டுக்காரர்களின் முகம் என்ன விதத்தில் மாறுகின்றது என்று பார்த்துப் பார்த்து...



வாடகை வீடு எடுத்துக் கொண்டு போகலாம் என்றாலும் சுலோசனாவுக்குச் சம்மதமில்லை. "அக்கா கோவிப்பா. அத்தான் பேசிக் கடிதம் போடுவார்." என்றெல்லாம் சொல்லுவாள்.

சுலோசனாவின் அக்காவின் புருஷன், பிள்ளைகள் மூன்று பேரும், அவனும் சுலோசனாவும் இந்த வீட்டில் அகதிகளாக தஞ்சம் புகுந்த மாதிரி சுவிஸில் தஞ்சம் புகுந்து இருந்தார்கள்.

சுலோசனாவின் அக்கா இந்தப் பெரிய வீட்டில் தன்னுடைய மற்றொரு மகளுடன் சகல வசதியுடன் அரசோச்சிக் கொண்டிருந்தாள். வீட்டில் இருக்கும் மகள் கூட விரைவில் வெளிநாட்டு அகதியாக ஆயத்தம்.

சுலோசனாவின் அக்காவின் வசதிகளும், வெளிநாட்டு வருமானமும் தான் சுலோசனாவுக்கு அக்காவின் மீது தீராத அன்பை வளர்த்திருக்க வேண்டும் என அவன் நினைப்பதுண்டு.

அக்காவின் வீட்டில் இருப்பதைப் பெருமையாக சுலோசனா நினைத்தாலும் மின்சாரம் இல்லாததால் தண்ணீர் அள்ளக் கஷ்டப்படுவதை, இரவு நேரத்தில் குப்பி விளக்கில் ரீ. வியின் வெறுந்திரையை தரிசிக்கும் நேரங்களிலும் அவள் படுகின்ற பாட்டை அவனால் ரசிக்கமுடிவதில்லை.

கிணற்றில் உட்சுவரில் வாளி அடிபடும் சத்தம் கேட்டது. தலையைத் திருப்பினான் அவன். சுவரில் வாளி அடிக்க அடிக்க தண்ணீர் அள்ளுவது சுலோசனாவாகத் தான் இருக்கும்.

கிணற்றடியில் சிவப்பு சோட்டி தெரிந்தது. அவன் எதிர்பார்த்தபடி சுலோசனா தண்ணீர் அள்ளிக்கொண்டு இருந்தாள். அவளும் தற்

www.tamilarangam.net



செயலாக அவனைப் பார்த்தாள். அவள் பார்வையில் இனிமை இல்லை. சாடையான கடுமை. அவனைத் திட்டித் தீர்க்கும் கடுமை அதில் பிரதி பலித்தது.

அவன் அவளைப் பார்த்துச் சிரித்தான். அவள் சிரிக்கவில்லை. அவள் சிரிக்க மாட்டாள் என்று அவனுக்குத் தெரியும்.

எழுந்து கிணற்றடியை நோக்கி நடந்தான். சுலோசனா ஒரு வாளி தண்ணீரைக் கொண்டுவந்து வாளிக்குள் ஊற்றி விட்டு, மறு வாளிக்காக கிணற்றின் உள் சுவரை இடித்துக் கொண்டிருந்தாள்.

'என்னப்பா?' என்றான் கிணற்றின் கட்டில் இருந்தபடி.

'ம்' என்று தான் அவள் பதில் சொன்னாள்.

'ஏனப்பா கோவிக்கிறாய். . . ?'

அவள் பதில் சொல்லாமலே தவித்தாள். 'துலாக்கயிற்றைப் பிடிச்சுப் பிடிச்சு கையெல்லாம் புண்ணாப் போச்சு' என்றாள் அவள்.

"என்னப்பா செய்யிறது?, இந்த நேரத்தில் என்ன செய்யலாம்? இந்தப் பிரச்சனை எங்களுக்கு மாத்திரமே, ஊரோட எல்லோரும், என் எல்லாத் தமிழ் சனத்துக்கும் தானே"

"நீங்கள் உங்கடை சித்தாந்தத்தை உங்களோடை வைச்சுக் கொள்ளுங்கோ. என்ரை நெஞ்சு எரியிற எரிவு எனக்குத்தான் தெரியும். "

"நீ படுகிற கஷ்டம் உனக்கு மாத்திரம்தான் எண்டே நீ நினைக்கிறாயப்பா. எத்தனை இலட்சம் சனம் என்னென்ன மாதிரியெல்லாம் கஷ்டப்படுதுகள், அதெல்லாம் உனக்குத் தெரியாதே?"

"தெரிஞ்சு என்ன செய்யிறது, என்ரை தலைவிதி" என்றாள் சுலோசனா.

தண்ணீர் அள்ளி முடிந்து வாளியை கையை விட அது ஆடுகாலில் போய் படீரென அடித்தது.

அவனுக்குப் பட்டென்று கோபம் வந்தது. "என்னப்பா நீ வாளியை இப்படி அடித்து விட்டால் அது நெளியாதே, இரவல் வீட்டில் வந்திருந்து கொண்டு உப்பிடிச் செய்ய அவை என்ன நினைப்பினம்?"

இது என்ன பிறத்தியார் வீடே, அக்காவின்ரை வீடுதானே. அவ ஒண்டும் பெரிசாய் குறை நினைக்க மாட்டா. நீங்கள் உங்கடை ஆக்கள் மாதிரி என்ரை வீட்டாக்களையும் நினைக்காதேயுங்கோ.

அவன் சுலோசனாவை நுட்பமாகப் பார்த்தான்.

உன்ரை ஆட்களின்ரை வீடோ, என்ரை ஆட்களின்ரை வீடோ? அதுவல்ல இப்ப பிரச்சனை. இப்ப நாங்கள் இருக்கிறது இரவல் வீடு, அதுவும் தலைக்கு மேலால செல் விழேக்க அகதியாய் ஓடி வந்து தஞ்சம் புகுந்திருக்கிறம். அதை மாத்திரம் மறந்து போகாதே. "

"அகதி எண்டு சொல்லி இஞ்சை வந்து என்ன சிரட்டைக்கையே தண்ணீர் குடிக்கிறீங்கள். நீங்கள் அகதியாய் ஓடி வந்திட்டீங்கள் எண்டு உங்கடை ஆக்கள் வந்து என்ன வெட்டியே விழுத்தினவையள். என்ரை அக்கா இருந்தபடியால்தானே, வா சுலோசனா இந்தப் பெரிய வீட்டில இருக்கலாம் எண்டு சொன்னவ". என்றாள் பெருமிதத்துடன்.

அவன் கோபம் தணிந்திருந்தது. "சுலோசனா நான் உன்னோடை போட்டி போட வரேல்லை. என்ரை ஆட்கள், உன்ரை ஆட்கள் எண்டு நானும் உன்னைப் போல் பேய்க் கதை கதைக்க விரும்பேல்லை. ஆயிரம்தான் நீ சொன்னாலும் எங்கடை சொந்த வீடு மாதிரி எதுவும் வராது. "

"நீங்கள் ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொண்டு சொல்லுவியள். நெடுக உப்படித்தானே, நீங்கள் கலியாணம் முடிச்சு இவ்வளவு காலம் ஆச்சு. எப்பதான் அக்கா வீடு, தங்கச்சி வீடு என்று விட்டிருக்கிறியள். " எனும்போதே அவள் கண்கள் கலங்கின.

1990 ம் ஆண்டு தீபாவளி அன்று "செல்கள்" அவர்கள் இருந்த வீட்டுப் பகுதியை சுகம் விசாரிக்கத் தொடங்கின. கண் முன்னாலேயே எதிர் வீட்டு நடுக்கூரையைப் பிளந்து கொண்டு ஒரு ஷெல் விழுந்தது.

சின்னத்துரைக் கிழவரும் அவரின் பேத்தி பத்மாவும் கொடூரமாக உடல் சிதறி மரணித்தார்கள்.

பெருங் குரலெடுத்து அழுத சுலோசனாவின் அழுகையை நிறுத்த அவன் பெரும்பாடு பட்டான்.

கையில் அகப்பட்ட பொருட்களுடன் அவர்கள் சைக்கிளில் புறப்பட்டார்கள். நல்லவேளை பிள்ளைகள் இல்லாமற் போனது என்று கூட அப்போது நினைத்தான்.

வாய்க்கால் வழியால் ஓடும் நீரைப் போல் சனங்கள் சுமைகளுடன் தங்கள் வீடுகளை விட்டும், கிராமங்களை விட்டும் தயக்கத்துடன் இடம் மாறிக் கொண்டிருந்தார்கள்.

தலைவிரி கோலமாக சைக்கிளில் இருந்த சுலோசனாவின் பேச்சுக்களை பொறுமையுடன் செவிமடுத்தான் அவன்.

"சும்மா இருக்கேலாமல் அவங்களோடை சுரண்டு பிடிக்கிறது, இப்ப பாருங்கோ நாங்கள் படுகிற பாட்டை. "

"ஐயா வீடு எப்ப நாசமாய் போகுதோ? ஐயா கஷ்டப்பட்டு உழைச்சு எனக்கு ஆசையாய் கட்டித் தந்த வீடு. நான் சின்னப் பிள்ளை தொடக்கம் விளையாடின மாமரம், கிணற்றடி எல்லாத்தையும் விட்டுப்போட்டு எப்படி இருக்கப்போறன். " என்று அவள் பலவாறாகச் சொல்லிப் புலம்பினாள்.

புறப்பட்டவுடன் சுலோசனாவின் அக்கா வீட்டிற்குத் தான் முதலில் வந்தார்கள். பிறகு இடைக்கிடை போய் வீட்டுச் சாமான்களை கொண்டுவந்து சேர்த்தாலும் அங்கு போய் குடியிருக்க முடியவில்லை, இப்போது கொழும்பில் நம்மவர்கள் சொந்த வீடு வாங்கி வைத்திருப்பது போல அக்கா வீடே பெருமையாகிப் போய்விட்டது சுலோசனாவிற்கு.

வருங்காலங்களில் சுலோசனாவின் அக்காவும் வெளிநாடு போக வீட்டை முழுமையாக பொறுப்பேற்க வேண்டிவரும் என்றெல்லாம் சுலோசனா சொல்லிக் கொண்டிருந்தாள்.

"இப்ப ஏன் அழுகிறாயப்பா? இப்பதான் உன்ரை அக்கா வீட்டில இருக்கிறாய். அவவோட உயிரும் பிராணனுமாயிருந்து சந்தோசமாய் சீவிக்கிறாய். பிறகென்ன பிரச்

www.tamilarangam.net



சனை" என்றான் அவன்.
"நீங்கள் என்ன நக்கலே அடிக்கிறீங்கள்" என அவள் கோபத்துடன் கேட்டாள்.
"இல்லையப்பா, நான் ஏன் கோவிக்க வேணும். இது உன்ரை அக்கா வீடு. நீ அவவோட சந்தோசமாய் இருக்கிறாய். வேற என்ன பிரச்சனைகள் வரப்போகுது."
சுலோசனாவின் முகத்தில் திருப்தி தெரியவில்லை, தன்னை அவன் கேலி செய்ததாக அவள் உணர்ந்திருக்க வேண்டும்.
"ஆரால நாங்கள் இஞ்சை வந்து அகதியாய் இருக்கிறம் எண்டு தெரியுமே. உங்களுக்கு அதுகளைப் பற்றி எப்பவாவது யோசிச்சனீங்களே. சும்மா இருக்கேலாமல் அவங்களோட சொறிஞ்சு சொறிஞ்சு எங்கடை நிம்மதியள் போனதுதான் மிச்சம். அதுகள் ஒண்டும் உங்களுக்கு தெரியாது. அக்கா வீட்டில இருக்கிறதுதான் பெரிய விசயமாய்ப் போச்சு."
அவனுக்குச் சட்டென்று சிரிப்பு வந்தது. "உன்ரை அக்கா நல்ல [illegible] ஆனால் இஞ்சை குடி [illegible] வந்து இப்ப என்ன கொஞ்ச நாள் தானே ஆகுது. இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்; எல்லாம் உனக்கு விளங்கும். உன்ரை சொந்தக் காணியின்ரை பக்கத்துக் காணிக்காரன் கதியால் வெட்டேக்கை இலை குழை விழுந்ததிற்கே சண்டைக்கு போனனியப்பா நீ. அதெல்லாம் மறந்து போனியே? இன்னும் கொஞ்சக் காலம் பொறு, இரண்டு மாதமோ மூன்று மாதமோ போகட்டும். நீயாய் நாங்கள் வேற வீட்டை போவம் எண்டு சொல்ல வருவாய், அப்பதான் உனக்கு எல்லாமே விளங்கும். அப்பதான் அவங்களை இவங்கள் சொறியிற விசயமே விளங்கும்." என்றான் அவன். ■

## வானை அளாவிச் சிறகை விரித்து....

பொன்வண்டே! பொன்வண்டே!!
எங்கு ஓடி ஒளிகின்றாய்?
மின்னுகின்ற உனது வண்ணங்களை
வானவில்லிடம் தானே பெற்றாய்?

கோமேதகக் கல்லொன்று கருங்காலெடுத்து நடந்ததோ?
தோகை மயிலின் இறகொன்று சிறகடித்துப் பறந்ததோ?
கோள மேனியின் நிறக்கலவைக்கு நிகரில்லாதுதானே
நீ உருமறைப்பின்றி என்வசம் சிக்கினாய்?

நெருப்புப் பெட்டியினுள் உன்னைச் சிறையிட்டேனா?
உன் முட்டைகளைப் பந்தாடி கலங்க வைத்தேனா?
சூரியக் கதிர்களைச் சிறகில் ஏற்றி
உயர உயரப் பறந்து விடு!
விரிந்த விண்ணை அளப்பது போல்
ஓமென்று ரீங்கரித்துப் பறந்துவிடு!
பெரு வெளியிலே நீ சுதந்திரமாய்ப் பறக்கின்ற
அழகிலேதான் உலகின் இயக்கமே நிகழுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசிய விடுதலையும் ஐரோப்பாவும்

## நம்பிக்கை தரும் மாற்றங்கள்

தேசிய இனங்களின் விடுதலை தொடர்பாகவும், புதிய நாடுகளின் உருவாக்கம் தொடர்பாகவும் ஐரோப்பாவில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. - சோவியத் சோசலிசக் குடியரசின் கூட்டமைப்பு என்ற கொம்யூனிசக் கட்டுமானம் சிதறுண்டு போய் உள்ளது. ஏராளமான சமஷ்டிக் குடியரசுகள் சுதந்திரப் பிரகடனம் செய்துள்ளன. சோவியத் யூனியனில், ஜனாதிபதி கோர்பச்சேவுக்கு எதிராக கொம்யூனிசவாதிகள் மேற்கொண்ட கிளர்ச்சி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து அநேகமான குடியரசுகள் தனிநாட்டுப் பிரகடனத்தைச் செய்துள்ளன. சோவியத் இறைமைக் குடியரசுகளின் கூட்டமைப்பு என்ற ரீதியில், மீண்டும் ஒரு இறுக்கமற்ற கூட்டமைப்பை, அரசியல் கூட்டைக் கொண்டு வரும் கோர்பச்சேவின் முயற்சி படுதோல்வியில் முடிந்துள்ளது. அத்திட்டத்தை குடியரசுகள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இறுதியில் ஒரு பொருளாதார இணைப்பையே (Economic Community) மிகுந்த பிரயத்தனத்தின் பேரில் செய்ய முடிந்துள்ளது. இறைமை வாய்ந்த குடியரசுகளின் பொருளாதார சமூகம் என்று இது அழைக்கப்படுகின்றது.

இவ்வொப்பந்தத்திற்கான மாநாட்டில் பல குடியரசுகள் பங்குபற்றவில்லை. பால்ரிக் குடியரசுகளும் வேறுசில குடியரசுகளும் இம்மாநாட்டைப் புறக்கணித்தன. இறுதியில் சோவியத் யூனியனின் 15 குடியரசுகளில் 8 குடியரசுகளே இப் பொருளாதார இணைப்பிற்கு சம்மதம் தெரிவித்து கையொப்பமிட்டன. ருஷ்யக் குடியரசுக்கு அடுத்த பெரிய, வளம் பொருந்திய குடியரசான உக்ரேன் இப் பொருளாதார, இணைப்பில் சேர மறுத்துள்ளதோடு, தனியான இராணுவத்தை அமைக்கப் போவதாகவும், அக்குடியரசிலுள்ள அணு ஆயுதங்களைத் தான் பொறுப்பெடுக்கப் போவதாகவும் அறிவித்துள்ளது. 3 பால்ரிக் குடியரசுகளை விட, உக்ரேன், பைலோரஷ்யா, ஜோர்ஜியா, மொல்டேவியா போன்றவையே பொருளாதார இணைப்பிலும் சேராத குடியரசுகளாகும். இப் பொருளாதாரச் சமூகம் பொதுச் சந்தையையும், பொதுப் பணப்புளக்கத்தையும், பணப் பெறுமதியையும் உடையதாக விளங்குவதோடு, அனைத்துக் குடியரசுகளுக்கும் நடுநிலையான மத்திய வங்கியையும் உடையதாக இருக்கும். பால்ரிக் நாடுகளை விட, ஏனைய குடியரசுகளை உலக நாடுகள் இன்னும் அங்கீகரிக்கவில்லை. அணு ஆயுதங்களை உள்ளடக்கிய பல புதிய நாடுகள் உருவாவதையும், பல முஸ்லீம் நாடுகள் உருவாவதையும் மேற்குலகம் விரும்பவில்லை. அணு ஆயுத விடயம் சோவியத் யூனியனால் நிர்வகிக்கப்பட வேண்டும் என்றும், அது கூட்டமைப்பிற்கு உரித்தான விடயம் என்றும் வலியுறுத்தப்பட்ட போதிலும், அவற்றைக் கவனத்தில் எடுக்க குடியரசுகள் தயாராக இல்லை. சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து தனிநாடுகளாக அமையப் போகும் முஸ்லீம் குடியரசுகள், மத்திய கிழக்கு, தென்னாசியாவிலுள்ள பல முஸ்லீம் நாடுகளோடு இணைந்து ஒரு இஸ்லாமியக் கூட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று வைக்கப்படும் கோரிக்கை, உலகில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி வருகின்றது.

யூகோஸ்லாவியக் குடியரசுகளைப் பொறுத்தவரை, ஸ்லோவேனியா தனிநாடாகத் தன்னைப் பிரகடனம் செய்துள்ளதோடு, அவ்வாறு செயல்படவும் ஆரம்பித்து விட்டது. ஸ்லோவேனியாவும், குரோஷியாவும் இவ்வருடம் யூன் 25 ம் திகதி சுதந்திரப் பிரகடனத்தை மேற் கொண்டன. ஐரோப்பிய சமூக அமைப்புத் தலையிட்டு, அச்சுதந்திரப் பிரகடனத்தை 3 மாத காலத்துக்கு பின்போடுமாறு கோரியது. சுதந்திரப் பிரகடனத்தை நடைமுறைப் படுத்துவதை 3 மாத காலத்துக்கு ஒத்திப் போடுவதாக அறிவித்த அவ்விரு குடியரசுகளும் செப்டம்பர் 25 ம் திகதியன்று, முழுமையான சுதந்திர நாடுகளாக இயங்க முடிவு செய்தன. ஸ்லோவேனியா விலிருந்து யூகோஸ்லாவிய சமஷ்டி இராணுவம் வெளியேறிய நிலையில், ஸ்லோவேனியாவின் இறைமையும், சுதந்திரமும் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் குரோஷியா மிகவும் இக்கட்டான நிலையில் இருந்து வருகின்றது. குரோஷியாவில், யூகோஸ்லாவியாவின் பெரும்பான்மை இனமான சேபியர் பெருமளவில் வாழ்வதே காரணமாகும்.

www.tamilarangam.net



குரோஷியாவில் வாழும் சேபியர்கள், தங்களுக்கும் சுதந்திரம் வேண்டுமென்றும், குரோஷிய ஆட்சியின் கீழ் வாழ முடியாது என்றும் கூறிப் போரிட்டு வருகின்றனர். இவர்களுக்கு முழு ஆதரவாக, யூகோஸ்லாவிய சமஷ்டி இராணுவம் செயற்பட்டு வருகின்றது. சேபியத் தலைவரான ஸ்லோபோடன் மிலோசவிக் குரோஷியாவின் தனிநாட்டுக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு தடையாக இருந்து வருகின்றார். சேபிய கெரில்லாக்களும், சமஷ்டிப் படைகளும் குரோஷியாவுக்கு எதிராக நடத்தும் சண்டையில் பெரும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன.

யூகோஸ்லாவியாவின் விடயத்தில், மத்தியஸ்தம் வகிக்க முன்வந்த ஐரோப்பிய சமூகத்தின் நிலைப்பாடு மிக முற்போக்கானதாக உள்ளது. ஐரோப்பிய சமூகம் ஸ்லோவேனிய, குரோஷிய குடியரசுகளின் தனிநாட்டுச் சுதந்திரத்தை அங்கீகரித்த நிலையிலேயே செயற்பட்டு வருகின்றது. யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதன் மூலம் குரோஷியாவின் புதிய நாட்டைப் பாதுகாக்க விரும்புகின்றது. ஆனால் யுத்த நிறுத்தங்கள்தான் நிலைப்பதாக இல்லை. இந்த நிலையில், யூகோஸ்லாவியாவிற்கு குறிப்பாக சேபியக் குடியரசுக்கு எதிராக, பொருளாதாரத் தடையை, கொண்டுவர ஐரோப்பிய சமூகம் முடிவு செய்துள்ளது. எண்ணை, எரிபொருள் தடையையும் இந்நாடுகள் பாதுகாப்புச் சபைமூலம் கொண்டுவர முடிவு செய்துள்ளது. யூகோஸ்லாவியாவின் 6 குடியரசுகளையும், மிக மெலிதான இணைப்பின் மூலம், ஒற்றுமைப் படுத்தும் திட்டத்தையும் அது சமர்ப்பித்துள்ளது.

இவ்வேற்பாடு இறைமையுள்ள சுதந்திர நாடுகளின் இணைப்பாகவே இருக்கும். இதன் பிரகாரம், குரோஷியாவிலுள்ள சேபிய மக்கள், குரோஷிய ஆட்சியின் கீழ் வாழுகின்ற நிலையே காணப்படுகின்றது. குரோஷிய நாட்டின் உள்ளே, சுயாட்சிப் பகுதிகளாக சேபியப் பகுதிகளை வைத்திருக்கலாம் என்று குரோஷிய ஜனாதிபதி ருட்ஜ்மன் தெரிவித்துள்ளார். சேபியப் பகுதிகளைப் பிரித்து, சேபியக் குடியரசோடு இணைக்க வேண்டும் என்று சேபியர்களும், அதன் தலைவரான மிலோசவிக்கும் கோருகின்றனர். ஐரோப்பிய சமுகத்தின் பொருளாதாரத் தடையின் அழுத்தம் காரணமாக, சேபியர் இறங்கி வருதல் கூடும். குரோஷியாவில் சேபிய சுயாட்சிப் பகுதிகள் உள்ளடங்கியதாகவே, பிரச்சனையைத் தீர்க்க ஐரோப்பிய சமூகம் விரும்புவதால், அவ்வாறே பிரச்சனை தீர்க்கப்படுமாறு வற்புறுத்தப்படலாம். ஆயினும், சேபிய மக்கள், தொடர்ந்து போராடுவார்களேயாயின், குரோஷியாவிலிருந்து சேபியப் பகுதிகள் பிரிக்கப்பட்டு, குரோஷியத் தனிநாடு அமையலாம். ஆயினும் குரோஷியா விரைவில் தனிநாடாக அமைவது நிச்சயம். ஐரோப்பாவில், யூகோஸ்லாவியா விடயத்தில், சுயநிர்ணய உரிமைக்கும், தனிநாட்டுக் கோரிக்கைக்கும் ஆதரவளிக்கும் ஐரோப்பிய சமூகம், ஆசியாவைப் பொறுத்தவரை, மூன்றாம் உலகைப் பொறுத்தவரை, தமிழீழப் பிரச்சனையைப் பொறுத்தவரை வேறு விதமான கொள்கையை கடைப்பிடிக்கின்றது. ஏன் இந்த இரண்டு விதமான அளவு கோல்கள்? ஏன் இரண்டு விதமான கோலங்கள்? ஐரோப்பாவில், புதிய நாடுகளின் பரவலை அங்கீகரிக்கும் மேற்குலகம், 3ம் உலக நாடுகளில் புதிய நாடுகளை அங்கீகரிக்க மறுப்பது ஏன்? இது அவற்றின் இரட்டை வேடத்தைக் காட்டுகிறதா என்ற கேள்வி எழுகின்றது. செக்கோஸ்லவாக்கியா விடயத்திலும் மேற்குலகு தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவளிக்கும் எனத் தெரிகின்றது. செக்கோஸ்லவாக்கியாவில், பெரும்பான்மை செக் மக்களும், ஸ்லாவிய மக்களும் தேசிய இன அடிப்படையில் முரண்பட்டு நிற்கின்றனர். முரண்பாடு முற்றி, தனிநாட்டுக் கோரிக்கை தீவிரமாக எழுந்தால், ஸ்லாவிய மக்களின் தனிநாட்டுத் தீர்மானத்தை மேற்குலகம் அங்கீகரிக்கலாம்.

யூகோஸ்லாவியாவில், இன்னொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். பொஸ்னியா எனும் குடியரசு சேபிய மக்களைக் கொண்டது. அங்கு முஸ்லீம் தேசிய இனம் சிறுபான்மையாக உள்ளது. குரேஷியர்களுக்கு இருந்த வசதி போல், இவர்களிடம் அரசாங்கம் ஒன்று இருந்ததில்லை. பொஸ்னிய குடியரசின் அரசாங்கம் சேபியர்களின் கைகளில் உள்ளது. எனவே, சுதந்திரப் பிரகடனம் செய்யவோ, சட்டரீதியாக தமது சுதந்திரம் குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவோ அவ்முஸ்லீம் மக்களுக்கு முடியவில்லை. எனவே அவர்கள் தன்னிச்சையாக, தமது சுதந்திரம், சுயநிர்ணய உரிமை குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்த முடிவு செய்துள்ளனர். வெளியரங்கமாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்த, பொஸ்னிய குடியரசு அரசாங்கம் மறுத்தால், இரகசியமாக வீடுகளில் வைத்து, மக்களின் கருத்துக் கணிப்பெடுக்கப் போவதாக அறிந்துள்ளனர்.

பெல்ஜிய நாட்டிலும் தேசிய இனப் பிரச்சனை பெரும் பிரச்சனையாக விரிவடைந்து வருகின்றது. அங்கு வாழும் பிளேமிஷ் மக்கள், சுதந்திர நாட்டுக் கோரிக்கை நோக்கித் தள்ளப்பட்டு வருகின்றனர். அங்கு வாழும் பிரெஞ்சு மொழி மக்கள், பிரான்ஸ் நாட்டுடன் நெருங்கிச் செயற்படுவதன் காரணமாக, பிளேமிஷ் பேசும் மக்கள், தங்கள் தேசிய அடையாளங்களை இழந்து, நசுக்கப்படும் ஆபத்தினை உணர்ந்து, பிரிந்து போகும் நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். இப்பிரச்சனையைத் தீர்க்கவும், மெலிதான இணைப்பின் மூலம் இரு தேசிய இனங்களையும் சேர்த்து வைக்கும் முயற்சி இடம் பெற்று வருகின்றது.

இவ் மெலிதான, இறுக்கமற்ற இணைப்புகளுக்கு கூட்டமைப்பு (Confederal) என்ற சொற்பிரயோகம் பயன்படுத்தப்படுகின்றது. சிலவேளையில் இணைப்பு (Association) என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது. 90 ம் ஆண்டுகளில்,

www.tamilarangam.net



பனிப்போரின் முடிவின் பின்னர், கொம்யூனிச ரஷ்யாவின் வீழ்ச்சியின் பின்னர், நடைபெறுகின்ற தேசிய இனங்களின் விடுதலை சம்பந்தப்பட்ட பிரச்சனை, புதிய அம்சங்களைக் கொண்டதாகவும், நவீனத் தன்மை வாய்ந்ததாகவும் விளங்குகின்றது. எனவே இதற்கான தீர்வுகளும் புதியதாக இருத்தல் வேண்டும். பழைய கருத்துக்களை நாம் வலித்து திணித்தல் முடியாது. புதிய தீர்வுகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். எனவே, இறைமை, அரசு, நில ஒருமைப்பாடு, தேசம், தேசிய இனம் போன்ற சொற்பிரயோகங்களுக்கு புதிய வியாக்கியானங்களைக் கொடுப்பதன் மூலமும், அவ்வடிப்படையில் செயற்படுவதன் மூலமும் புதிதாக முளைத்துள்ள இப்பிரச்சனைகளுக்கு சரியான, நடைமுறைச் சாத்தியமான, யதார்த்தமான தீர்வுகளைக் காணலாம். ■

---

## மக்கள் பக்கம்

*பள்ளிப் படிப்பினை பாதியில்*
*நிறுத்திய எம் இளம்*
*பிஞ்சு உள்ளங்கள்*
*சொந்த மண்ணே*
*சொர்க்கம் என்றெண்ணி*
*சென்றன அணிதிரண்டு*
*போர்க்களம் நோக்கி*

*யார் வருவார் திரும்பி*
*என்று யார் உணர்வார்.*

*இதை அறியா*
*சில மனங்கள்*
*வெட்டிப் பேச்சாலும்*
*வேதனைச் சொல்லாலும்*
*வாட்டி வதைக்கின்றனர்.*
*தூற்றிய கைகளும்*
*போற்றும் ஓர் நாள்*
*இந்தச் சிறு*
*மனங்களை நோக்கி.*

**மா. டயந்தன்**
**பாரிஸ்**

www.tamilarangam.net





# கடலும் அதன் வளங்களும்

## கட்டுரைத் தொடர் - 5

"கடலும் அதன் வளங்களும்" என்ற தொடரில் இது வரை கடல் நீரிலிருந்தும், அதில்வாழும் உயிரினங்கள், தாவரங்களிலிருந்தும் பெறக்கூடியவற்றைப் பற்றி நாம் கூறியிருந்தோம். இனி அடுத்து கடல் நீரின் அடியில் உள்ள நிலப்படுக்கையில் இருந்து பெறக்கூடிய கனிப்பொருட்களைப் பற்றி இங்கு பார்ப்போம்.

உண்மையில் பூமியின் நிலப்பரப்பில் இருந்து பெறக் கூடிய கனிப்பொருட்களைப் போன்று இருமடங்கானவை கடலின் நிலப்படுக்கையில் உள்ளன. ஆனால் நாம் இன்று சாதாரணமாக கடல் மண்ணையும், கடல் கரையோரங்களின் ஆழம் குறைந்த பகுதிகளிலிருந்து பெற்றோலிய எரி பொருட்களையும் பெறுகின்றோம். ஆனால் இவற்றைவிட கந்தகம், இரும்பு, செம்பு, நாகம், தங்கம் போன்ற கனிப்பொருட்களையும் நாம் எடுத்துக் கொள்ளலாம். உதாரணமாக நிலக்கரி, வைரச் சுரங்கங்கள் பூமியின் மேற்பரப்பிலிருந்து சுமார் 4 கிலோ மீற்றர் ஆழத்தில் தென்னாபிரிக்காவில் காணப்படுகின்றன.

சமுத்திரவியலாளர்களின் ஆராய்ச்சிகளின்படி இவை ஐந்து சமுத்திரங்களிலும் பரந்து கிடக்கின்றன. ஆனால் கூடிய அளவு கனிப்பொருட்கள் பசுபிக் சமுத்திரத்தில் உள்ளன. பூமியில் உள்ள எரிமலைகளைவிட கூடியஅளவு எரிமலைகள் கடலில் உள்ளன. இவை எரிகுழம்பைக் கக்கும் போது நிலத்தின் கீழ் உள்ள கனிப்பொருட்கள் நிலப்பரப்பின் மேல் மட்டத்திற்கு வருகின்றன. இத்தகைய எரிமலைகளால் தோற்றுவிக்கப்பட்ட மலைகள் பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கு சுமார் 50-100 மைல் அகலத்தில் சமுத்திரங்களில் பரந்துள்ளன. பூமியில் எமது தேவைக்களவானவற்றை எடுக்க முடியாவிடில் அவற்றை நாம் கடலிலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்கு வருகின்றோம்.

ஆனால் இவற்றைப் பெறுவதற்கான செலவும் தொழில் நுட்பமும் கூடிய அளவில் இருப்பதால் வறிய நாடுகள் செலவும், தொழில் நுட்பமும் மிகவும் மலிவாக கிடைக்கும் காலத்திற்காக காத்திருக்க வேண்டியிருக்கும். அல்லது தமது பிரதேசத்தில் உள்ள கனிவளங்களை மற்றைய நாடுகளுக்கு விற்க வேண்டி வரும். இதேவேளை கடலிலிருக்கும் வளங்களை ஒவ்வொருவரும் தாம் விரும்பியவாறு பெற்றுக் கொள்ளலாமா என்பதை நாம் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். கடலில் நீர் எல்லைகள் ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் கரையிலிருந்து 12 மைலாகும். ஆனால் அதன் நில எல்லைகள் கரையிலிருந்து 200 மைல்களாகும். இந்த 200 மைல் பிரதேசத்திற்குள் உள்ள கனியவளங்கள் அந்தந்த நாடுகளிற்குச் சொந்தமாகும். மேலும் இக் கனிவளங்களை கடலிலிருந்து எடுக்க உலக நாடுகளின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். இந்து சமுத்திரத்தில் இந்தியாவின் தெற்குப் பகுதியில் உள்ள கனிப்பொருட்களை எடுப்பதற்கு இந்தியா தற்போது ஐக்கிய நாடுகள் சபைக்கு தனது விண்ணப்பத்தைச் சமர்பித்துள்ளது. ஆனால் இந்து சமுத்திரம் உலக நாடுகளால், கடல் உயிரினங்கள் வாழ்வதற்கான பாதுகாப்பு வலயமாக பிரகடனப்பட்டுள்ளதால் இதை ஐக்கிய நாடுகள் ஏற்காத பட்சத்தில் இந்தியா அதை உடனடியாக செய்யமுடியாதாகும்.

இன்று தமிழீழம் பெரும் அழிவுகளுக்குள்ளாக்கப்பட்

www.tamilarangam.net



டுள்ளது. எதிரியானவன் திட்டமிட்டே இவ்வழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றான். ஆனால் போர்க்காலத்தில் புதியவகை உற்பத்தி முதலீடுகளை செய்வது வீணாகும். ஆனால் இக்காலகட்டம் எம்மிடமுள்ளவற்றைக் கொண்டு எமது தேவைக்கு வேண்டியவைகளைக் கண்டு பிடிப்பதற்கு சிறந்ததாகும். ஸ்ரீலங்கா அரசாங்கங்கள் தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யாமல் விட்டதன் விளைவுகளை நாம் கண்கூடாக இன்று கண்டுகொள்கிறோம். பெரும் பொருளாதாரத் தடையை தமிழ் மக்கள் மீது சுமத்தி தமிழ் மக்களை அடிபணிய வைக்கும் முயற்சிகளில்தான் தனது கவனத்தை செலுத்துகிறது. முன்னோர்கள் அஜாக்கிரதையாக இருந்ததன் விளைவே இதுவாகும்.

இத்தகைய தவறுகளை நாமும் எமது சந்ததியினருக்கு விட்டுச் செல்லக்கூடாது. தமிழ் மக்களினதும் பிரதேசங்களினதும் பொருளாதாரத்தையும் உற்பத்தியையும் பெருக்குவதில் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டும். வெளிநாடுகளில் வாழும், தமிழீழ தேசப் பற்றும், தமிழுணர்வும் கொண்ட தமிழ் மக்கள் ஆடம்பரச் செலவுகளில் தமது பணத்தை விரயமாக்குவதை விடுத்து, எமது மக்களுக்கு சுபீட்சமளிக்கும் வகையில் தமது சேமிப்புக்களை முதலீடு செய்ய முன்வர வேண்டும். ■

# உப்பு சிறந்த உபயோகம்

உப்பு இலங்கை அரசின் ஏற்றுமதிப் பொருட்களில் அதிக லாபம் தருவனவற்றில் ஒன்று. இலங்கை அரசின் உப்பு ஏற்றுமதியில் பெருமளவு தமிழீழப் பகுதியில் விளைவது ஆகும். தமிழீழத்தின் ஆனையிறவு, இலங்கை அரசின் முக்கிய உப்பு உற்பத்தித்தளம்.

ஆனால் தமிழீழத்தில் ஆணையிறவு தவிர செம்மணி, கல்லுண்டாய் வெளி ஆகியனவும் உப்பு விளைவிக்க ஏற்ற தளக்கடல்கள். ஆனால் செம்மணி, கல்லுண்டாய் வெளி ஆகியன உப்பு உற்பத்தியில் பயன்படுத்தப்படுவதில்லை.

இவ்விரு தளங்களிலும் உப்பு விளைவிக்கப்பட்டால், தமிழீழத்தின் முக்கிய அந்நிய செலாவணிப் பொருளாக உப்பு இருக்கும். உப்பை அந்நிய நாடுகள் இறக்குமதி செய்வதன் நோக்கம் உணவிற்காக அல்ல; உப்பில் அடங்கிய சோடியத்தை (Na) பிரித்தெடுப்பதற்காகவே. தவிர, சவர்க்காரம் தயாரிப்பின் முக்கிய பொருளான எரிசோடா (Sodiam hydroxide). அப்பச்சோடா போன்றவற்றையும் தயாரிக்கின்றன.

எனவே, தமிழீழத்தின் பெரிய இயற்கை வளமாகிய கடல் நீரேரிகளை வெறும் படுக்கையாக வைத்திருக்காது கூடிய உப்பு விளைச்சலை மேற்கொள்ளலாம். சோடியம் தயாரித்தல் தமிழீழத்தில் அதிசெலவு கூடியதெனினும் எரிசோடாவை அதிகளவில் தயாரித்து சிறந்த அந்நியச் செலாவணியைப் பெறலாம்.

** தபா **

www.tamilarangam.net



**இந்தியா, தமிழகம், சாத்தூரைச் சேர்ந்த திரு. சேகரன் அவர்கள் அண்மையில் பாரிசுக்கு விஜயம் செய்திருந்தார். கடந்த முப்பத்தைந்து ஆண்டுகாலமாக மொழி ஆய்விலும், இலக்கியத்துறையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள அவர் பல நாடுகளுக்கும் பயணங்களை மேற்கொண்டு தனது மொழி ஆய்வை மேற்கொண்டுள்ளார். தமிழ்மொழியின் தொன்மை பற்றியும், பல மொழிகளின் மூலம் தமிழ் எனவும் ஆதாரங்களுடன் நிறுவமுயலும் திரு. சாத்தூர் சேகரன் அவர்கள் எரிமலைக்கு அளித்த செவ்வி.**



> **பிரபாகரன் போன்றவர்கள் மிகவும் அபூர்வமாகத்தான் தோன்றுகிறார்கள். அவர் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரம்**

**நிருபர்:**
மொழி ஆய்விலே கிட்டத்தட்ட முப்பத்தைந்து ஆண்டுகளை செலவழித்துள்ளதாகக் கூறுகின்றீர்கள்; அப்படியானால் உங்களது ஆராய்ச்சி எந்த நிலையில் உள்ளது?

**சேகரன்:**
ஏறக்குறைய தொன்னூற்றைந்து வீதமான பங்கு முடிந்துவிட்டதாகவே கருதுகின்றேன். இன்னும் ஐந்து வீதமே பாக்கியுள்ளது. அவற்றையும் விரைவில் முடித்துவிடுவேன். அவற்றை புத்தக வடிவத்தில் கொண்டுவர வேகமாக செயற்பட்டுவருகின்றேன்.

**நிருபர்:**
மொழி, இலக்கியம் என்ற வட்டத்தில் உங்களின் வாழ்வில் பெரும் பகுதியை செலவழித்துள்ள நீங்கள் அரசியலில் பங்குபற்றும் எண்ணத்தைக் கொண்டுள்ளீர்களா?

**சேகரன்:**
எனக்கு என்னவோ இந்தமாதிரி இலக்கியங்களில் எல்லாம் சேவை பண்ணிட்டு, பின்னால பார்ப்போம் என்று எண்ணியிருந்தேன்; ஆனால் இன்றைய காலகட்டம் என்னை அரசியலுக்கு இழுக்குமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

**நிருபர்:**
தற்போது, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போக்கை தமிழக அரசு மேற்கொண்டுள்ளதே; சிறீலங்கா அரசின் தற்போதைய இராணுவ நடவடிக்கைகளுக்கு ஜெயலலிதா அரசின் நிலைப்பாடு சாதகமாய் அமையாதா?

**சேகரன்:**
நான் அப்படி நினைக்கவில்லை; ஆனால் மூன்று மாதத்தில் ஜெயலலிதா தன் போக்கை கொஞ்சம் குறைத்துக்கொள்வார் என்று நினைக்கின்றேன். ஏனெனில் மக்களுடைய அபிப்பிராயங்கள் அவருக்கெதிராக வேகமாக மாறிவருகின்றன. மேலும், சமஸ்கிருதத்திற்கு முன்னுரிமை கொடுக்கப் போவதாகவும், அதற்காக பல்கலைக் கழகம் ஒன்றைத் திறக்கப்போவதாகவும்அவர் அறிவித்தது பெரும் எதிர்ப்பைக் கிளப்பியுள்ளது.

**நிருபர்:**
விடுதலைப் புலிகளுக்கு எதிரான, ஜெயலலிதா அரசின் கெடுபிடிகள் , தமிழக மக்களை எவ்வகையில் பாதித்துள்ளது?

**சேகரன்:**
தமிழக மக்கள் சிந்திக்கின்றார்கள். ஆனால் அதை வெளிப்படுத்துவதற்கு இன்னும் முன்வரவில்லை; முடியவில்லை. அதற்கு ஒரு குரல் வேண்டும். கருணாநிதி போன்றவர்கள் முன்வந்து, என்னை கைது செய்தாலும் பரவாயில்லை என்று துணிந்தால்; எங்கள் இயக்கக்காரர்களை கைது செய்தாலும் பரவாயில்லை என்று துணிந்து இருபதினாயிரம் பேராவது முன்வந்தால் மக்கள் இன்னும் கொஞ்சம் வேகமாகச் சிந்திப்பார்கள்.

www.tamilarangam.net



**நிருபர்:**
அப்படி ஓர் மாற்றம் உருவாகும் என்று எண்ணுகின்றீர்களா?

**சேகரன்:**
ஏன் உருவாகாது? நானே பேசலாமே, நான் முதலில் வந்து கல்லூரிகளில் மாணவர்கள் மத்தியிலே எனது போராட்டத்தை ஆரம்பிக்கப் போகின்றேன். வீரம் என்று சொல்லுவதற்கு இராஜஇராஜ சோழனுக்கு அப்புறம், கரிகாலனுக்கு அப்புறம் எங்கே போவது? ஈழப் புலிகளைத் தான் நாம சொல்லணும். புறநானூற்றில் ஒரு பாட்டு, அண்ணனை அன்றைய போரில் இழந்தாள்; மறுநாள் போரில் கணவனை இழந்தாள்; மூன்றாம் நாள் போரிற்கு தன் சின்ன மகனையும் அனுப்பியிருந்தாள் என்று புத்தகத்தில் படிக்கின்றோம். அதை இன்று ஈழத்தில் பார்க்கின்றோமே.

**நிருபர்:**
தற்பொழுது சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது மோசமான விமானத் தாக்குதல்களை தொடுத்துள்ளது; ஆனால் பேச்சு வார்த்தைமூலம் பிரச்சனைகளைத் தீர்க்க விரும்புவதாகவும் கூறிவருகின்றதே?

**சேகரன்:**
நாபாம் குண்டு இருக்கு... அந்தமாதிரி மாற்றம் செய்ய வேண்டும். இன்று விடுதலைப் புலிகள் என்பது அரசாங்க அமைப்பு மாதிரி வந்துவிட்டது. நாம் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்.. நீ எங்கள் மக்கள் நூறு பேரை கொன்றால், நாங்கள் சிங்கள மக்கள் ஆயிரம் பேரைக் கொல்வோம் என அறிவிப்பே விடவேண்டும். வேறு வழியில்லை.

**நிருபர்:**
சிங்கள அப்பாவி மக்களை விடுதலைப் புலிகள் ஒருபோதும் தாக்கிய, அழித்த சம்பவங்கள் நடைபெற வில்லை என்ற போதும், விடுதலைப் புலிகள் சிங்கள மக்களை தாக்குகின்றார்கள், அழிக்கின்றார்கள் என்று பிரச்சாரம் செய்யப்படுகின்றதே; இந்த நிலையில் உங்களது கருத்து மோசமானதாக இராதா?

**சேகரன்:**
என்ன செய்ய முடியும்? இப்ப நீங்கள் ஒரு நாடு, அவங்கள் ஒரு நாடு. இப்ப அந்த நிலைக்கு வந்தாகிவிட் டது. செல்வநாயகம் போன்றவர்களெல்லாம் வெறுமனே பேசிப் பேசி, காந்தி வழியில் உண்ணாவிரதம் இருக்கப்போறேன், அப்படி இப்படி எல்லாம் செய்து தோல்வியடைந்து விட்டது. ஜெயவர்த்தனேயுடன் ஒப்பந்தம் பண்ணினா மற்றவன் வந்து கிழித்துப் போடறான், மற்றவனோட ஒப்பந்தம் பண்ணினா அடுத்தவன் வந்து கிழித்துப்போடறான்.

**நிருபர்:**
விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான பிரச்சாரங்களிலோ செயற்பாடுகளிலோ ஈடுபடும் எவரும், கடுமையான சட்டங்களின் மூலம் தண்டிக்கப்படுவார்கள் என்று ஜெயலலிதா அறிவித்துள்ளார்?

**சேகரன்:**
எங்களுடைய கருத்தைச் சொல்லுவதைத் தடைசெய்ய அவங்க யாரு? நான் வந்து இந்தியாவிற்கு துரோகமான கருத்தைச் சொன்னா அதைத் தடை செய்யலாம். பாலஸ்தீனத்துக்கு ஆதரவு கொடுங்கள் என்றால் என்னையாரும் தடை பண்ண முடியாதோ அதே மாதிரி ஈழப் புலிகளுக்கு ஆதரவு கொடுங்கள் என்று கேட்பதை யாரும் தடை பண்ண முடியாது. அவா வந்து சும்மா பத்திரிகைகளுக்குக் கொடுத்த மிரட்டல். எங்கேயோ நடக்கிற பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு கொடுக்கிறாங்க, ஆதரவு திரட்டு றாங்க; ஆனால் கண்ணுமுன்னால நடக்கிற ஈழ யுத்தத்தில எங்கள் இரத்தத்தின் இரத்தங்கள் போராடுவதை ஆதரிப்பதை எந்தச் சட்டம் தடை செய்ய முடியும்? நானும் சட்டம் தெரிந்தவன்தானே. எந்தச் சட்டத்தை வைத்தும் என்னையோ, எங்களையோ, யாரையும் தடைபண்ணமுடியாது.

**நிருபர்:**
இறுதியாக ஒரு கேள்வி, தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும், விடுதலைப் புலிகள் தொடர்பாக வும் உங்களது கருத்து என்ன?


**சேகரன்:**
தமிழர்கள் வீரமானவர்கள் என்பதற்கு ஈழத்திலேதான் எங்களுக்கு நம்பிக்கை பிறந்திருக்கு; எதிர்காலத்தில் ஈழத்தில் மாத்திரமல்ல எல்லாத் தமிழர்களையும் தலைநிமிர வைக்கும் என நான் நம்புகின்றேன். தியாகிக ளாக மாறியவர்களுக்கும் சரி, இன்று சேவை புரிபவர்களுக்கும் சரி எல்லாத் தமிழர்களும் தலைவணங்க வேண்டும். ஈழம் கிடைத்தால் தமிழர்கள் எங்கோ ஓர் மூலையில் தலைநிமிர்ந்து நிற்பார்கள்; அதை வைத்து மீதித் தமிழர்களுக்கும் தன்னம்பிக்கை ஏற்படும். பிரபாகரன் போன்றவர்கள் மிகவும் அபூர்வமாகத்தான் தோன்றுகின்றார்கள். அவர் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரம். ■

www.tamilarangam.net




எங்களின் கடலிலே எவன் எம்மைப் பிடிப்பது

எங்களின் படகினை எவன் இங்கு தடுப்பது.



www.tamilarangam.net

# எழுதாத கவிதை



எழுதுங்களேன்,
நான்
எழுதாது செல்லும்,
என்
கவிதையை எழுதுங்களேன்!
ஏராளம்...
ஏராளம்... எண்ணங்களை
எழுத
எழுந்துவர
முடியவில்லை!
எல்லையில்
என் துப்பாக்கி
எழுந்து நிற்பதால்
எழுந்து வர
என்னால்
முடியவில்லை
எனவே
எழுதாத - என்
கவிதையை எழுதுங்களேன்!
சீறும்
துப்பாக்கியின் பின்னால்
என் உடல்
சின்னாபின்னமாக்கப்பட்டு
போகலாம்!
ஆனால்
என் உணர்வுகள்
சிதையாது
உங்களை
சிந்திக்க வைக்கும்!
அப்போது
எழுதாத
என் கவிதையை
எழுதுங்களேன்!
மீட்கப்பட்ட - எம்
மண்ணில்
எங்கள்
கல்லறைகள்
கட்டப்பட்டால்;
அவை
உங்களின் கண்ணீர்
அஞ்சலிக்காகவோ
அன்றேல்
மலர்வளைய
மரியாதைக்காகவோ அல்ல
எம்மண்ணில்
மறுவாழ்விற்கு
உங்கள் மனஉறுதி
மகுடஞ் சூடவேண்டும்
என்பதற்காகவே!
அர்த்தமுள்ள
என் மரணத்தின் பின்
அங்கீகரிக்கப்பட்ட
தமிழீழத்தில்
நிச்சயம் நீங்கள்
உலாவருவீர்கள்!
அப்போ
எழுதாத
என் கவிதை
உங்கள் முன்
எழுந்து நிற்கும்!
என்னைத்
தெரிந்தவர்கள்,
புரிந்தவர்கள்,
அரவணைத்தவர்கள்,
அன்பு காட்டியவர்கள்
அத்தனை பேரும்
எழுதாத
எழுந்து நிற்கும்
என் கவிதைக்குள்
பாருங்கள்!
அங்கே...
நான் மட்டுமல்ல
என்னுடன்
அத்தனை
மாவீரர்களும்
சந்தோசமாய்
உங்களைப் பார்த்து
புன்னகை பூப்போம்!

ஆனையிறவு மோதலில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட வானதி (பத்ம ஜோதி சண்முகநாத பிள்ளை) இறுதியாக எழுதிய கவிதை இது.